# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 | கதிர் 140 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 02 சனிக்கிழமை 15.04.2017

விலை - 20
பக்கங்கள் - 20


## பிரி. அமைச்சர் அடுத்த வாரம் இலங்கைக்கு

கொழும்பு, ஏப். 15
பிரிட்டனின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களின் பொதுநலவாய அலுவலக அமைச்சர் அலோக் சர்மா அடுத்த வாரம் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார். இந்தப் பயணத்தின்போது ஏப்ரல் 21 ஆம் திகதி லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் சொற்பொழிவையும் சர்மா ஆற்றவுள்ளார். (து-5)

## வெசாக் தினத்தில் எம்மை விடுவிக்க அரசுக்கு அழுத்தம்

கூட்டமைப்பு எம். பிக்களிடம் அரசியல் கைதிகள் வலியுறுத்து


யாழ்ப்பாணம், ஏப். 15
"உலக வெசாக் தினத்தை முன்னிட்டு தம்மைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்வதற்கு அரச தலைவருக்கு விரைந்து அழுத்தம் கொடுங்கள். அதற்கான நடவடிக்கையைத் துரிதப்படுத்துங்கள்" >> 17

## தமிழரசுக் கட்சியின் மே தினக் கூட்டம் இம் முறை அம்பாறையில்

யாழ்ப்பாணம், ஏப். 15
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மே தினப் பேரணி மற்றும் கூட்டம் இந்த முறை அம்பாறையில் இடம்பெறவுள்ளது. அத்ற்கான >> 17

## ரூபா 1 கோடி ஹெரோயினை கடத்தியவர் சிக்கினார்

கொழும்பு, ஏப். 15
பாதணிக்குள் ம றைத்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான உயிர்க்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோயினைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது >> 17



## கறுப்பு உடையணிந்து கேப்பாபிலவு மக்கள் நேற்றுப் போராட்டம்

முல்லைத்தீவு, ஏப். 15
கேப்பாபிலவு காணிகளை விரைவாக விடுவிக்கக்கோரிப் போராட்டம் நடத்தும் மக்கள் தமிழ் புத்தாண்டு தினத்தில் கறுப்பு உடைகளை அணிந்தும் கறுப்புத் துணிகளைக் கொடிகளாக்கியும் மரத்தில் ஏறி நின்றும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்தனர். >> 17

# இலங்கை படையினரை தண்டிக்க வேண்டும்

அமெரிக்கா வலியுறுத்து



கொழும்பு, ஏப்ரல் 15
ஹெய்ட்டியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றியபோது அங்குள்ள சிறுவர்களைத் துர்நடத்தைக்கு உட்படுத்தினர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இலங்கை இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும்.
இவ்வாறு ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே வலியுறுத்தினார்.
'ஹெய்ட்டியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றியபோது, சிறுவர்களை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய இலங்கைப் படையினர் மீது எந்த >> 17



## வடக்கில் அமைதியான புத்தாண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 15
நேற்று அதிகாலையில் பிறந்த ஏவிளம்பி புது வருடத்தை மக்கள் அமைதியாகக் கொண்டாடினர். வழமையான புதுவருடப் பிறப்பு போல் இல்லாமல் தமிழ் மக்கள் அமைதியான முறையில் இந்தப் புதுவருடத்தை ஆலய வழிபாட்டுடன் கொண்டாடினார்கள். பட்டாசு வெடிக்க வைப்பது இம்முறை குறைந்தது. >> 17



கேப்பாபிலவுக் காணிகள் விடுவிக்கப்படுமெனக் கூறி

## போராட்டம் நடத்துவோருக்கு ராணுவத்தால் உணவுப் பொதி

முல்லைத்தீவு, ஏப். 15
காணிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்களுக்கு, விரைவில் காணிகள் கையளிக்கப்படவுள்ளன என்று கூறி இராணுவ முகாமில் இருந்து புதுவருட நல்லிணக்க உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. >> 17

## நாடாளுமன்ற அரசியலில் பெண்களின் பங்களிப்பு இலங்கையில் குறைவு

பன்னாட்டு நாடாளுமன்ற ஒன்றியம் தகவல்

கொழும்பு, ஏப். 15
ஆசிய நாடுகளின் நாடாளுமன்ற அரசியலில் பெண்களின் பங்கு குறைவாக உள்ள நாடாக இலங்கை உள்ளதாகப் பன்னாட்டு நாடாளுமன்ற ஒன்றியம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக பன்னாட்டு நாடாளுமன்ற ஒன்றியம் வெளியிட்டுள்ள தகவலின்படி, ஆப்கானிஸ்தான் இரண்டாவது >> 17

## புதிய அரசமைப்பு; அறியாத நிலையில் 55 வீதமான மக்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் கூறுகிறது

கொழும்பு, ஏப். 15
புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி தொடர்பில், பொது மக்களில் 55 சதவீதத்தினர் அறிந்திருக்கவில்லை என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. >> 17

படையினர் மீதான குற்றச்சாட்டுக் குறித்து

## இலங்கையிடம் உண்மையை அறிய ஐ.நா. செயலர் பணிப்பு

நியூயோர்க், ஏப். 15
"ஹெய்ட்டியில் பணியாற்றும் இலங்கைப் படையினர் மீதான பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டு தொடர்பான தகவல் எதுவும் ஐ.நா. சபைக்கு தரப்படவில்லை. இலங்கையுடன் தொடர்பு கொண்டு குற்றச்சாட்டுத் தொடர்பான உண்மை விடயத்தை அறியுமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் பணித்துள்ளார்"
இவ்வாறு ஐ. நா. பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்தார்.
"பாலியல் துர்நடத் தைக் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இலங்கைப் படையினர் தண்டிக்கப்பட வேண்டும். அவர்கள் எங்கிருந்து சென்றிருந்தாலும் பொறுப்புக்களை ஏற்க வேண்டிய வர்களாகவே உள்ளனர்" என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (வ-5)

## காணாமற்போனோரின் உறவுகளால் நேற்று கரிநாள் கடைப்பிடிப்பு

முல்லைத்தீவு, ஏப். 15
வடக்கில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், கறுப்பு உடைகள் அணிந்து கறுப்புத் துணிகளை தலையில் கட்டியவாறு புதுவருடத்தை புறக்கணித்துப் போராட்டத்தில் >> 17



மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரில்

## காணி வாங்க நிதிகேட்டு 114 பேர் விண்ணப்பம்

யாழ்., ஏப். 15
வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களில், சொந்தக் காணி இல்லாதவர்களுக்கு 2 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்வதற்குரிய பணத்தைப் பெறுவதற்கு 114 பேர் விண்ணப்பித்துள்ள னர் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. >> 16

## கனேடியத் தலைவர் தமிழ் மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்து

ரொறன்ரோ, ஏப். 15
"உலகம் முழுவதிலும் வாழும் தமிழ் மக்களின் புத்தாண்டு தினத்தை வரவேற்கிறேன். இந்த புத்தாண்டில், குடும்பங்கள் மற்றும் நண்பர்கள் கூடி கொண்டாடுவதோடு மட்டுமின்றி வரும் வருடம் அவர்களுக்கு சிறப்பாக அமைய >> 16



## கடற்படையினரை வெளியேறக் கோரி முசலியில் தொடர்கிறது போராட்டம்

மன்னார்,ஏப்.14
தமது பூர்வீக நிலங்களில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றக் கோரி மன்னார் மாவட்டம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் மக்கள் முன்னெடுத்து வருகின்ற கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 23ஆவது நாளாகவும் தொடர்ந்தது.
இந்தப் போராட்டத்துக்குத் தொடர்ச்சியாக பல்வேறு அமைப்புக்களால் ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றது. அரசியல் பிரமுகர்கள், மதத்தலைவர்கள், கிராம மக்கள் உட்பட பலர் நாளாந்தம் ஆதரவை வழங்கி வருகின்றனர்.
"கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு தற்போது கடற்படை முகாமாக மாறியுள்ள தமது காணிகளை மீட்டு சொந்தக் கிராமத்தில் தங்களை மீள்குடியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த மார்ச் 23ஆம் திகதி வியாழக்கிழமை போராட்டத்தை ஆரம்பித்தனர். போராட்டத்தில் ஈடுபடும் மக்களை நேற்றைய தினம் தேசிய மட்டத்தில் உள்ள முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடி தமது ஆதரவை வழங்கினர்.
"புது வருடத்தைக் கொண்டாடுவதற்கு எங்களுக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. எங்களுக்கு வேண்டியது எல்லாம் எமது பூர்வீகக் காணிகள்தான். எமது சொந்த நிலம்தான் எமக்கு வேண்டும். இந்தப் புதுவருடக் கொண்டாட்டம் எல்லாம் அதற்குப் பிறகுதான். அதனாலேயே நாங்கள் நேற்றைய புதுவருட தினத்தை புறக்கணித்துத் தொடர்ந்து போராடி வருகின்றோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
இதேவேளை, முசலி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மறிச்சுக்கட்டி முஸ்லிம் மக்களுடைய போராட்டமும் நேற்று 19ஆவது நாளாகவும் தொடர்ந்தது. தமது பூர்வீகமான குடியிருப்பு நிலங்களையும் விவசாயக் காணிகளையும் மேய்ச்சல் தரைகளையும், மேட்டு நிலக்காணிகளையும் புதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அபகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அந்த மக்கள் குற்றம் சுமத்தினர். புதிய வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக அரச தலைவர் மீளப்பெற வேண்டும் என்று கோரியே அவர்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (வ-21-12)

## குப்பைமேடு சரிந்து 100 வீடுகள் சேதம்

கொலொன்னாவை மீதொட்டுமுல்லையில் குப்பைமேடு சரிந்து விழுந்ததால் அருகில் இருந்த 100 வீடுகள் சேதமடைந்துள்ளன. குறித்த வீடுகளில் வசிப்பவர்களில் 2 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்பு நடவடிக்கை தொடர்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழப்புக்கள் தொடர்பில் நேற்று முன்னிரவு வரையில் அறிவிக்கப்படவில்லை. (வ-4)

## நந்திக்கடற்கரை வெளியில் நேற்று மாட்டு வண்டிச் சவாரி

முல்லைத்தீவு, ஏப். 15
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி முல்லைத்தீவு நந்திக்கடற்கரை வெளியில் நேற்று இடம்பெற்றது. 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த விளையாட்டு விழா நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது
சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று வற்றாப்பளையின் மங்களேசுவரா விளையாட்டுக்கழகம் மாட்டுவண்டிச்சவாரி உள்ளிட்ட பல்வேறு பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகளை முன்னெடுத்தது. மாட்டுவண்டிப் போட்டி பெட்டியைக் கொழுவியவாறு உழவு இயந்திரத்தை பின்னோக்கிச் செலுத்துதல் உள்ளிட்ட பாரம்பரிய போட்டிகள் இடம்பெற்றன. பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றனர்.
விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்கள் துரைராசா ரவிகரன் மற்றும் கந்தையா சிவநேசன், வற்றாப்பளை அம்மன் ஆலயத்தலைவர் மு. குகதாசன், கிராம அலுவலர் இ.இரவீந்திரா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர். (வ-21)

## வாகனத் தகர்ப்பு வெடிபொருள் வவுனியா வீடொன்றில் மீட்பு



வவுனியா, ஏப். 15
வவுனியாவில் 15 கிலோ எடையுடைய வாகன தகர்ப்பு வெடிபொருள் ஒன்று நேற்று முன் தினம் மாலை மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"வவுனியா உக்கிளாங்குளம் 4ஆம் ஒழுங்கையில் உள்ள வீடொன்றிலேயே குறித்த வெடிபொருள் மீட்கப்பட்டது. புதுவருடத்தை முன்னிட்டு வீடு மற்றும் வீட்டின் வளவைத் துப்புரவு செய்யும் போது மண்ணில் புதையுண்ட நிலையில் 15 கிலோ நிறையுள்ள வெடிபொருள் காணப்பட்டது. அது தொடர்பில் வீட்டின் உரிமையாளர் பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் வெடிபொருள் தொடர்பான விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.
நீதிமன்ற அனுமதியைப் பெற்று சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் வெடிபொருள் நேற்று செயலிழக்க வைக்கப்பட்டது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
இதேவேளை, குறித்த வெடிபொருளில் கப்டன் பவான் (ஐயா) தகர்ப்பு வெடி மருந்து என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இது விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டு இருக்கலாம் என நம்பப்படுகின்றது. (வ-21)

அரச அலுவலக நேரத்தை மாற்றியமைத்து

## சாலைகளில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கத் திட்டம்

முதன்மைச் சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்த அரச அலுவலக நேரங்களைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பெருநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது.
"அமைச்சரவை அங்கீகாரத்துடன் 3 மாத காலத்துக்கு பத்தரமுல்லையை அண்மித்த அரச அமைச்சுக்கள் மற்றும் அலுவலகங்களை மையப்படுத்தி அலுவலக நேரங்கள் மாற்றியமைக்கப்படும்" என்று பெருநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூபசிங்க கூறினார். (வ-4)

## மோ.சை.பந்தயத்தில் பங்கேற்ற இளம் குடும்பத்தலைவர் சாவு

கிண்ணியா, ஏப். 15
கிண்ணியாவில் மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் ஈடுபட்ட இளம் குடும்பத்தலைவர் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு பிரதேசத்தில் புத்தாண்டை முன்னிட்டு மோட்டார் சைக்கிள் பந்தயம் நடத்தப்பட்டது. அதில் பங்கேற்ற முத்துராசா சாந்தன் (வயது-21) என்ற இளம் குடும்பத் தலைவரே மின் கம்பத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதால் படுகாயமடைந்தார். அவர் கிண்ணியா தள வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.
"அவருக்கு அண்மையில்தான் திருமணம் இடம்பெற்றது. விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-5)

கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டறிந்து தருமாறு கோரி வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றைய புத்தாண்டு தினத்தை கறுப்பு நாளாக கடைப்பிடித்தனர். (வ-7-26-35)



யாழ்ப்பாணம்



முல்லைத்தீவு



வவுனியா



வவுனியா



கிளிநொச்சி

# வடமாகாண அபிவிருத்தி; 18ஆம் திகதி ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப். 15
வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான ஆலோசனைக் கூட்டம் 18ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் வடக்கில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.
வடக்கின் பல பெரிய திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது சிறப்புக் கவனம் செலுத்தப்படவுள்ளது.
குறிப்பாக ஆறுமுகம் திட்டம் , மாங்குளத்துக்கான குடிதண்ணீர்த் திட்டம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள மரமுந்திரிகைத் திட்டம், குருநகர் இறங்குதுறை அபிவிருத்திக்கான நிதி ஈட்டல் ஆகியன தொடர்பில் இதில் ஆராயப்படவுள்ளன.
இவற்றுடன் வடக்கு மாகாணத்துக்குக் கிடைக்கவுள்ள 1000 மில்லியன் ரூபா செலவிலான வர்த்தக மையம் அமைத்தல், 50 மில்லியன் ரூபா செலவிலான இரணைமடுக்குளக் கட்டுப் பூங்கா போன்ற விடயங்கள் குறித்தும் இதில் விரிவாகப் பேசப்படவுள்ளது. (த-101)

# வீடமைப்புப் பயனாளிகள் தெரிவில் அதிகாரிகளுக்கு பெரும் நெருக்கடி நிலமை

## தென்மராட்சிப் பிரதேசத்துக்கு 135 வீடுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதால்

தென்மராட்சி ஏப். 15
தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்ற போதிலும் மீள்குடியேற்ற அமைச்சினால் யாழ். மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட வீடுகளில் 135 வீடுகள் மட்டுமே ஆபகுதிக்கு வழங்கப்பட்டமையால் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் அதிகாரிகள் நெருக்கடியைச் சந்தித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
பிரதேசத்தில் நிரந்தர வீடு இல்லாதவர்களின் எண்ணிக்கை கடந்த வருட அறிக்கைப் பிரகாரம் 5 ஆயிரத்துக்கு மேல் காணப்படுகின்ற போதிலும் மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையான வீடுகள் பிரதேசத்துக்கு வழங்கப்பட்டுள்ளமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
கடந்த வருடம் பிரதேசத்தில் நிரந்தர வீடில்லாதவர்களில் 348 பேருக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களால் முன்மொழியப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் பலர் காணிகளில் காணப்பட்ட நிரந்தர வீடுகளை உடைத்துவிட்டு வீடமைப்புத் திட்டத்தில் புதிய வீடுகளை அமைத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் இவ் வருடத்திற்கென 135 பயனாளிகளைத் தெரிவு செய்வதற்குப் பிரதேச செயலக உயர் அதிகாரிகள் குழு நேரடியாகச் சென்று பார்வையிட்டபோது ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இன்னமும் ஓலைக் கொட்டில்களிலும் தகரங்களால் கூரையிடப்பட்ட கொட்டில்களிலும் வாழ்ந்து வருவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர். இவ்வாறான நிலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்த வருகின்ற நிலையில் யாரை முன்னிரிமைப்படுத்தித் தெரிவு செய்வது என்பதில் அவர்கள் குழப்பமடைந்துள்ளனர் எனவும் கூறப்பட்டது. அவ்வாறான குடும்பங்கள் ஒவ்வொன்றும் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதால் தெரிவினை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனவும் கூறப்பட்டது.
மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட பட்டியல் பிரகாரம் உள்ள குடும்பங்களைப் பார்வையிட்டபோது தெரிவில் உள்ளவர்களை விட மிகமோசமான நிலையில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் பல குடும்பங்கள் இருப்பதைக் காணமுடிகிறது.
குறிப்பாக வன்னியிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் வந்த பல குடும்பங்கள் இன்னமும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது. பல குடியிருப்பாளர்கள் நிரந்தர குடியிருப்பு இல்லாமை மட்டுமல்ல அன்றாட உணவுக்கே கஷ்டமான நிலையில் வாழ்வதைக் காணமுடிகிறது என்று பயனாளிகளின் விவரங்களைச் சேகரிக்கச் சென்ற பிரதேச செயலக உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.
இருப்பினும் உயர் அதிகாரிகளால் வழங்கப்பட்ட தெரிவுப் பட்டியல் பிரகாரம் விவரங்களைப் பெற்றுள்ளோம். அதனை அனுப்பி இறுதி முடிவு செய்ததும் பட்டியல் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படுமெனவும் அவர்கள் கூறினர்.
பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், வன்னி மற்றும் இந்தியாவிலிருந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளோர், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்று சமூகத்தில் இணைக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் என முன்னரிமை அடிப்படையில் தெரிவு செய்தாலும் நிரந்தர வீடு அவசியம் தேவை எனக் கருதுபவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டுமெனவும், இவர்களுடன் உள்ளூரில் இடம்பெயர்ந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளோர் எனக் கணக்கிட்டால் தென்மராட்சி பிரதேசத்துக்கு வழங்கப்பட்ட 135 வீடுகள் போதாது எனவும் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது.(த-9)

# வீடற்ற நிலையில் பலர் உள்ளபோதும் வீணே செலவாகும் பெருமளவு பணம்

## *தென்மராட்சி மக்கள் கவலை*

தென்மராட்சி ஏப். 14
தென்மராட்சியில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடுகள் இன்றித் தவிக்கின்றனர். அவர்களுக்கு வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஆனால் வாசிகசாலைகள், மயான கொட்டகைகள் உள்ளிட்டவற்றுக்குப் பணம் செலவழிப்பது கவலை அளிப்பதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.
தென்மராட்சி பிரதேசம் போரினால் அழிவடைந்த பிரதேசம் என்பது அனைவரும் அறிந்த விடயம்.
பிரதேசத்தில் நிரந்தர வீடில்லாமல் வாழ்பவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நிரந்தரமாக வசிப்பதற்கு வீடில்லாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ஓலைக் கொட்டில்களிலும் மர நிழலிலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் பிரதேசத்தில் உள்ள வாசிகசாலைகள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்றவற்றுக்கு மதில்கள் அமைக்கவும், பிரதேச சபைகளால் நிர்வகிப்பப்படும் மயானங்களுக்கு எரிகொட்டகைகள் அமைக்கவும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்குவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலர் கவலை தெரிவித்தனர்.
வடக்குகிழக்கு மாகாணங்களில் போர் வன்செயல்களின்போது வீடுகள் அழிக்கப்பட்ட பிரதேசங்கள் பல உள்ளன. மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு அவை நன்கு தெரியும் .இன்று கூட அவ்வாறு பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர வீடின்றி ஓலைக் கொட்டில்களிலும் மர நிழல்களிலும் வசித்து வருவதும் அவர்களுக்குத் தெரியும்.
வருடாந்தம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீடும், மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியும் வழங்கப்படுகின்றன. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் தமக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியில் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் துயரங்களைப் போக்கும் வகையில் தொகுதிக்கு ஒரு வீடு அமைத்து வழங்க நிதி ஒதுக்கி ஒரு குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாதா ?
நாட்டில் உள்ள அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் இதற்கு முன்வந்திருந்தால் இதுவரை எத்தனையோ குடும்பங்களுக்கு வீடு அமைத்து கொடுத்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட தேவைக்கு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கலாமெனக் கட்டுப்பாடு இருப்பின் இரு உறுப்பினர்கள் இணைந்து ஒரு வீடு அமைத்துக் கொடுக்கமுடியாதா ? எனவும் சமூக ஆர்வலர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளனர்.
நிரந்தர வீடுகள் இல்லாமல் பல குடும்பங்கள் அல்லாடும் நிலையில், வாசிகசாலைக்கும் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் மதில் அமைக்க ஒதுக்கும் நிதியை வீடு இல்லாத மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக்க முடியாதா எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.
மாகாண சபையின் சபை உறுப்பினர்கள் சிலர் ஓலைக் கொட்டில்களில் வசிக்கும் குடும்பங்களுக்குத் தகரங்கள், சீமேந்து பைக்கற்றுக்கள் போன்றவை மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்து வழங்குகின்றனர். அதனை வரவேற்கிறோம். அவ்வாறான குடும்பங்கள் வாழும் வீடுகளை நிரந்தர வீடுகளாக அமைத்து வழங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வராதமை வேதனையளிக்கிறது எனவும் மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.
பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவைகளும் அதிகமாக உள்ளன. அவற்றினை இனங்கண்டு நிவர்த்தி செய்யவேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கவேண்டுமெனவும் அவர்கள் கூறினர். (த-9)



# சிங்களப் பாரம்பரியத்துடன் மைத்திரிபாலவின் புத்தாண்டு

கொழும்பு, ஏப். 15
சிங்களப் பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கொழும்பிலுள்ள அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றைய தினம் புத்தாண்டைக் கொண்டாடினார்.
அரச தலைவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
அரச தலைவரின் பாரியார் ஜயந்தி சிறிசேன பிள்ளைகள் சத்துரிக்கா, தஹம், தரணி, மருமகன் திலின மற்றும் பேரப்பிள்ளைகள் ஆகியோருடன் இணைந்து சுபநேரத்தில் அடுப்பில் நெருப்பு மூட்டிய அரச தலைவர் மைத்திரிபால புத்தாண்டுச் சம்பிரதாயங்களில் ஈடுபட்டார்.
பணிகளைத் தொடங்கும் பாரம்பரியத்திற்கேற்ப அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தில் சிவப்புச் சந்தன மரக்கன்றை அரச தலைவர் மைத்திரிபால நட்டார். அதன் பின்னர் கைவிசேட சம்பிரதாய நிகழ்விலும் கலந்து கொண்டார். (த-5)

# வேலைதேடும் பட்டதாரிகள் வடக்கில் கறுப்புப் புத்தாண்டு

## *மெழுகுவர்த்தி ஏற்றி வரவேற்பு*

யாழ்ப்பாணம் ஏப்ரல் 15
வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் நேற்று அதிகாலை பிறந்த ஏவிளம்பி புதுவருடத்தைக் கறுப்புப் புத்தாண்டாக மெழுகுவர்த்தி ஏற்றி வரவேற்றனர்
கடந்த 47 நாள்களாக தமக்கான அரச வேலைவாய்ப்பை வழங்கக் கோரியும், தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களில் உரிய நடைமுறையைப் பின்பற்றக் கோரியும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாகக் காலவரையற்ற போராட்டத்தில் வடக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.
உரிய தீர்வு கிடைக்காமையால் எமது வாழ்வும் இருண்டு கிடக்கிறது. ஆகவே எமக்கு இது கரிய புத்தாண்டு என அவர்கள் தெரிவித்தனர்.
அதிகாலை பிறந்த புத்தாண்டை நடுவீதியில் ஒன்றுகூடி மெழுகுவர்த்தி ஏற்றிக் கரிய புத்தாண்டாக வரவேற்றனர். (த-ரி)



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வீதிகளில் படுத்துறங்கும் கால்நடைகளால் சிரமம்

கிளிநொச்சி, ஏப். 15

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் இரவு நேரங்களில் படுத்துறங்கும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த பிரதேச சபை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதி வீதிகளில் இரவு நேரங்களில் கால்நடைகள் படுத்துறங்குகின்றன. இதனால் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக, ஏ-9 வீதியில் வேகமாக வரும் வாகனங்கள் கால்நடைகளுடன் மோதி விபத்துக்குள்ளாகின்றன. இதனால் உயிரிழப்பு, காயம் என்பன ஏற்படுவதுடன் வாகனங்களும் சேதமாகின்றன. அத்துடன் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் கால்நடைகளும் உயிரிழக்கின்றன.

இதனைக் கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் கோரப்பட்டபோதும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கால்நடைகள் கட்டுப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், கால்நடைகள் பட்டி பட்டியாக வீதிகளில் வருவதால் அவற்றைப் பிடித்து வைத்துப் பராமரிப்பதற்குரிய இடம் போதாது. அவற்றுக்கான உணவு போன்ற பிரச்சினைகளும் காணப்படுகின்றன. இதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (த-6)

# வர்த்தக மையத்தை அமைக்க வடக்குக்கு 1000 மில்லியன் ரூபா

## அனுமதி கிடைத்துள்ளது என்கிறார் தலைமைச் செயலர்

யாழ்ப்பாணம், ஏப். 15

வடக்கு மாகாணத்தில் வர்த்தக மையக் கட்டடத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கு 1000 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வாறான வர்த்தக மையக் கட்டடத் தொகுதி நாட்டின் ஏனைய சில மாகாணங்களில் காணப்படுகின்றது.

இதேபோன்று வடக்கிலும் ஒரு வர்த்தக மையக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது. மத்திய அரசின் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிலேயே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

கிடைத்துள்ள ஒப்புதலுக்கு அமைய திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான பணிகளை நிறைவு செய்து வழங்கும் பட்சத்தில் இந்த ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டில் குறித்த திட்டம் ஆரம்பிக்கப்படலாம் என்றார். (த-101)

# சதொச மூலம் அரசுக்கு புத்தாண்டு காலத்தில் அதிகளவு வருமானம்

## அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 15

சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக கடந்த ஆண்டு புத்தாண்டுக் காலத்தில் பெற்றுக் கொண்ட வருமானத்தை விட அதிக வருமானத்தை இந்த முறைப் பெற்றுக் கொண்டுள்ளதாக, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக 10 அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதி 975 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதன் சந்தைப் பெறுமதி ஆயிரத்து 500 ரூபாவாகும். கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமான இந்த விற்பனை நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட மேற்படி சேவையின் ஊடாகவே அதிகளவு வருமானம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிசாத் கூறியுள்ளார். கடந்த புத்தாண்டு விற்பனையின்போது கிடைக்கப் பெற்ற வருமானத்தின் இரண்டு மடங்கு வருமானம் இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-5)

# சுழிபுரத்தில் இன்று மாலை மாபெரும் புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 15

மாபெரும் சித்திரைப் புதுவருட விழா சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலடியில் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், தலைமை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

வாழ்த்துரையை சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவருமான கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்தவுள்ளார்.

முன்னதாக இன்று காலையில், புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகளும் கோயில் வடக்கு வீதியில் நடைபெறவுள்ளது. போர்த் தேங்காய் அடித்தல், தாச்சிப் போட்டி, கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, கிறீஸ் மரம் ஏறுதல், தயிர் முட்டி உடைத்தல், சங்கீதக் கதிரை, யானைக்குக் கண் வைத்தல் என்பன நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு, இன்னிசை இரவு இசை நிகழ்ச்சியும், கிராமிய நடனமும் அதன் பின்னர் பரிசளிப்பு வைபவமும் நடைபெறவுள்ளது.

உதயனின் ஏற்பாட்டில் ஐ.சி.பி.ரி. கம்பஸின் பிரதான அனுசரணையில் இந்த விழா நடைபெறுகின்றது. (த-5)

# கசிப்பு உற்பத்தி நிலையம் தருமபுரத்தில் முற்றுகை

## ஒருவர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, ஏப்.15

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனத் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் மயில்வாகனபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையத்தைச் சுற்றிவளைத்தனர்.

இதன்போது இரண்டு பரல் கோடாவும், இரண்டு பரல் கசிப்பும் கைப்பற்றப்பட்டது. அத்துடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக ஒருவர் கைது செய்யப்பட்டார் எனவும், உற்பத்தி செய்த இடம் அழிக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

கைதான நபருக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார். (த-6)

# புதிய பள்ளிவாசல் நேற்று முல்லைத்தீவில் திறப்பு



முல்லைத்தீவு, ஏப். 15

முல்லைத்தீவு நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஜும்மாப் பள்ளிவாசலை நேற்று மதியம் கைத்தொழில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் திறந்து வைத்தார்.

முல்லைத்தீவு நகரில் முஸ்லிம் மக்களின் வழிபாட்டு தலமாக விழங்கி ஜும்மா பள்ளி கடந்த காலத்தில் ஏற்பட்ட போர் காரணமாகவும், சுனாமியால் முழுமையாக அழிவடைந்த நிலையில் தரை மட்டமாக்கப்பட்டிருந்தது. புதிதாக அமைக்கப்பட்ட பள்ளிவாசல் இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. (த-7)

# மருந்து விசிறிய வாழைக்குலைகளை வைத்திருந்தோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 15

பருத்தித்துறை மந்திகைச் சந்தையில் மருந்து விசிறிய வாழைக்குலைகளை விற்பனைக்கு வைத்திருத்த குற்றச்சாட்டில் 2 வியாபாரிகள் மீது சுகாதாரப் பரிசோதகர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.


இரசாயனப் மருந்து விசிறிய வாழைக்குலைகள் மந்திகைச் சந்தையில் விற்பனைக்காக வைக்கபட்டிருந்தன. இவ்வாறு 16 வாழைக்குலைகளைக் கடந்த புதன்கிழமை சுகாதாரப் பிரிவினர் கைப்பற்றினர். அவற்றை விற்பனைக்கு வைத்திருந்தோர் எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

வாழைக்குலைகள் உள்ளிட்ட பழவகைகள் முற்றி உரிய பதத்துக்கு வருவதற்கு முன்னரே மருந்து விசிறிப் பழுக்க வைக்கப்பட்டு சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

அவ்வாறு செய்வது உடல்நலத்துக்குக் கேடு என்று சுகாதாரத் துறையினர் பல முறை அறிவித்திருக்கின்றனர். சாவகச்சேரி சந்தையில் மருந்து விசிறிப் பழுக்க வைக்கும் வர்த்தகர்கள் பலர் கையும் மெய்யுமாகவும் பிடிபட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டுள்ளனர். (த-4-ரி-26)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய 2 டிராக்டர்கள் பொலிஸாரின் வசம்

## இரு சாரதிகளும் கைது



கிளிநொச்சி ஏப் 15

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதாவகவும் அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை மற்றும் உழவனூர்ப் பகுதிகளில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் கூறினார். (த-6)

## வடக்கில் 32 பாலங்களை நிறுவும் பணிகள் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 15
வடக்கு மாகாணத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்ட 82 பாலங்களில் தற்போது 32 பாலங்களின் நிர்மாணப் பணிகள் முழுமையாகமுடிவடைந்துள்ளதாக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் மூன்று ஆண்டுகாலத் திட்டத்தில் இலங்கையில் அமைக்கப்படவுள்ள ஆயிரம் பாலத் திட்டத்தில் வடக்கில் 82 பாலங்களை அமைக்க அனுமதி கிடைத்தது. இதனடிப்படையில் இன்றுவரை 32 பாலங்களின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளன.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய 50 பாலங்களின் நிர்மாணப் பணிகள் இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பாலங்கள் அமைப்பு மூலம் வடக்குக்கு நன்மை கிட்டியதோடு வன்னிப் பகுதியில் மழை காலங்களில் ஏற்பட்டுவந்த போக்குவரத்துச் சிரமம் தவிர்க்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(த - 101)

# முல்லை. வைத்தியசாலை அமைந்துள்ள காணிகளின் உரித்தாளர்களுக்கு இழப்பீடு

### 58 மில்லியன் ரூபாவை வழங்கியது திறைசேரி

யாழ்ப்பாணம், ஏப். 15
முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அமைந்துள்ள நிலத்தின் உரிமையாளர்களுக்கான இழப்பீட்டுப் பணம் வழங்குவதற்காக திறைசேரியினால் 58 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவின் மாவட்ட வைத்தியசாலை அமைந்துள்ள மாஞ்சோலை நிலத்தின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காகத் திறைசேரியினால் 58 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை தற்போது 26 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இவ்வாறு வைத்தியசாலை அமைந்துள்ள பிரதேசம் ஒரே உறவுக்காரர்களான 11 பேருக்கு உரித்துடையது. அவர்கள் போர் காரணமாக நாட்டைவிட்டு இடம்பெயர்ந்திருந்த நிலையில் அந்தக் காணி சுவிகரிக்கப்பட்டு வைத்தியசாலை அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு சுவிகரிக்கப்பட்ட நிலத்தில் வைத்தியசாலைக் கட்டடம் அமைந்துள்ள பகுதிக்குரிய இழப்பீட்டையும், எஞ்சிய நிலத்தையும் விடுவிக்குமாறு கோரி அதன் உரிமையாளர்கள் தொடர்பு கொண்டிருந்தனர். இது தொடர்பில் நாம் நீண்ட ஆய்வில் ஈடுபட்டதோடு வைத்தியசாலையின் எதிர்காலத் தேவை உள்ளிட்ட திட்டமிடலிலும் ஈடுபட்டோம். உரிமையாளர்கள் கோருவதுபோன்று கட்டடம் அமைந்துள்ள பகுதி தவிர்ந்த எஞ்சிய நிலப்பரப்பை விடுவித்தால் எதிர்காலத்தில் திட்டமிட்டுள்ள பல திட்டங்களை மேற்கொள்ளமுடியாத நிலைமையே ஏற்படும்.

இதனால் இது குறித்து மீண்டும் காணி உரிமையாளர்களுடன் பேசப்பட்டது. அத்துடன் வைத்தியசாலையின் வளாக வரைபடம் உள்ளிட்ட விவரங்களுடன் மத்திய சுகாதார அமைச்சை நாடி வைத்தியசாலை அமைந்துள்ள காணிக்கான இழப்பீட்டுப் பணத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் முயற்சித்தோம். மத்திய சுகாதார அமைச்சருடன் பல சுற்றுப் பேச்சுக்களும் இடம்பெற்றன. இதன் பயனாக இந்த ஆண்டில் இழப்பீட்டுப் பணத்தை வழங்க ஏற்பாடு செய்து தருவதாகக் கடந்த ஆண்டு மத்திய சுகாதார அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் வாக்குறுதியளித்திருந்தனர்.

இதன் பிரகாரம் தற்போது 2017ம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக வைத்தியசாலை வளாகக் காணி சுவீகரிப்புக்கு நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுவிடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி பிரதேச செயலகத்துக்கு வழங்கப்படும். பிரதேச செயலாளரினால் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உதவியுடன் குறித்த பிரதேசம் விலை மதிப்பீடு செய்யப்படும். அதன் பின்னர் உத்தியோகபூர்வமாகக் காணி சுவீகரிக்கப்பட்டு அதற்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள காணிக்குத் தற்போது 58 மில்லியன் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை குறித்து தற்போது நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்குக்கு ஒரு நிரத்தரத் தீர்வு கிட்டும் - என்றார்.

(த - 101)

## நம்பிக்கை நிறைந்த நாள்

புனித வெள்ளியன்று யேசுநாதர் சிலுவையில் உயிர் நீத்த சோகத்தை நினைவு கூர்கிறோம்.
உயிர்ப்பு ஞாயிறன்று அவர் உயிர்த்தெழுந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறோம்.
இடையில் ஒரு நாள்,சனிக்கிழமை இருக்கிறதே அதன் முக்கியத்துவம் என்ன?
பெரும்பான்மையோர் என்ன செய்கிறார்கள்?
வெள்ளியன்று தேவாலயத்தில் சிறப்புத்தொழுகைகளுக்குச் சென்ற பின்,சனியன்று மறுநாள் உயிர்ப்பு ஞாயிறுக்கான ஏற்பாடு செய்வதில் சுத்தம் செய்தல், சிறப்பு உணவு தயாரித்தல்,கடைசி நிமிடக் கடைக்குச் செல்லல்,உறவினர்களை எதிர்பார்த்தல் என நாள் கழிகிறது.
அது சாதராண நாளல்ல; அது ஒரு நுழைவாயில் நாள். நாளை நடக்கப்போவதைப் பற்றி நம்பிக்கை நிறைந்த நாள் வாழ்க்கையில் சில நேரங்களில் நாம் தாங்கமுடியாத வலியில், துன்பத்தில், சோகத்தில் மூழ்கிப் போகிறோம்.அந்த நேரத்தில்,நாம் மீண்டும் என்றாவது மகிழ்ச்சியாக இருப்போமா என்ற எண்ணம் ஏற்படுகிறது.
வாழ்க்கையின் பல திருப்பு முனையான நேரங்களில், நாம் பலவற்றை விட்டுக் கொடுக்க, விட்டு விலக நேரிடுகிறது. நமது அன்புக்குரியவர்களை, நம் உடமைகளை, நம் தாய் மண்ணை, நம் நம்பிக்கைகளை,நம் சுயத்தன்மையை, நம் பாதுகாப்பை, இவையெல்லாவற்றையும்.அந்த நேரத்தில் எதிர் நிற்கும் பாதை இருண்டதாக நிச்சயமற்றதாக, அவநம்பிக்கை அளிப்பதாகத் தோன்றுகிறது .
புனித வெள்ளியன்று யேசுநாதர் சிலுவையில் உயிர் நீத்தபின் அவரது சீடர்கள்,அவரைத் தொடர்பவர்கள்,அவர் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அவரை நேசித்தவர்கள் அப்படிப்பட்ட ஒரு நிலையில்தான் இருந்தனர். என்ன செய்வதென்று தெரியாத நிலையில், அவருக்கு இது எப்படி நடந்தது என்ற அவநம்பிக்கையில் கேள்விகள் மட்டுமே நிறைந்த, பதில்கள் கிடைக்காத ஒரு நாள்தான் அவர்களுக்கு இந்தச் சனி.




ஆம் புனித சனி என்பதுஅப்படிப்பட்ட நாள்தான். ஒரு இடைப்பட்ட நாள்; காத்திருப்பு நாள்; எதிர்காலம் பற்றி மௌனமாகச் சிந்திக்கும் நாள்; வழிகாட்டலுக்கும், ஒளி தருவதற்கும் பிரார்த்திக்கும் நாள்; இயேசு போதித்த மனித நேயத்தை சக மனிதஅன்பை, ஒற்றுமையைப் பற்றிச் சிந்தித்து துன்பத்தில் இருக்கும்போது ஒருவருக்கொருவர் ஆதரவாகவும்,அன்புடனும் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் நாள்.அமைதியாக இறை நம்பிக்கையில் கழிக்க வேண்டிய நாள்.
எத்தனையோ இடர்களை இருண்ட பாதைகளைத்தாண்டி வர உதவிய இறைவனுக்கு நன்றி சொல்வோமாக.

யூடித்

### வனஜீவராசித் திணைக்களம் சுவீகரித்த பகுதியில்

# 2,900 ஏக்கரை விடுவிக்க அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 15
மன்னார் மாவட்டத்தின் பாப்பாமோட்டை, வேட்டையாமுறிப்பு, நாயாற்றுவெளி ஆகிய இடங்களை உள்ளடக்கிய வகையில் 2 ஆயிரத்து 900 ஏக்கர் நிலப்பரப்பில் 6 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியில் மேற்கொள்ளத் திட்டமிட்ட நிலப் பகுதியை வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் இருந்து விடுவிப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அமைச்சு கூறியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மன்னார் மாவட்டத்தில் 6 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நன்னீர் மீன்பிடி மற்றும் இறால் வளர்ப்பு உள்ளிட்ட 5 கட்டத் திட்டம் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில் இந்த ஆண்டுக்காக 700 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டு இதற்கான பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது.

முதற் கட்டமாக 700 மில்லியன் ரூபாவையும் எஞ்சிய நிதியை 5 வருடத்திலும் முழுமையாக விடுவிப்பது என நிதி வழங்குநர்கள் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

இந்தத் திட்டத்தை முன்னெடுக்கும் பட்சத்தில் மாவட்டத்தில் சுமார் 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அந்த வேலை வாய்ப்புக்கு மன்னார்



மாவட்ட இளைஞர்களையே நியமிக்கவும் இணக்கம் காணப்பட்டது. மாவட்டத்தில் தொழிலாளர்களைப் பெறமுடியாத சந்தர்ப்பத்தில் மட்டும் மாகாணத்துக்கு உட்பட்ட வகையில் பணியாளர்களை நியமிக்க முடிவு செய்யப்பட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

இதற்கென பாப்பாமோட்டை, வேட்டையாமுறிப்பு, நாயாற்றுவெளி ஆகிய இடங்களை உள்ளடக்கிய வகையில் 2 ஆயிரத்து 900 ஏக்கர் நிலப்பரப்பு மாவட்ட நிர்வாகத்தால் முன்மொழியப்பட்டு அந்த இடங்களை நிதி வழங்குநர்களும் பார்வையிட்டு ஏற்றுக்கொண்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மாவட்டச் செயலர், பிரதே செயலாளர், மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் எவருக்குமே தெரியாமல் வன ஜீவராசிகள் திணைக்களம் மேற்கொண்ட ஒரு நடவடிக்கை இந்தத் திட்டத்திற்கே முட்டுக்கட்டையாக அமைந்தது.

இந்தப் பகுதியில் உள்ள 70 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத் தமது திணைக்களத்துக்குச் சொந்தமானது என வனஜீவராசிகள் திணைக்களம் 2016ஆம் ஆண்டில் ஒரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டுள்ளது. இதனை யாருமே அறிந்திருக்கவில்லை.

வன ஜீவராசிகள் திணைக்களம் சுவிகரித்ததாக அறிவித்த பகுதியில் நன்னீர் மீன் வளர்ப்புக்கு எனப் பரிந்துரை செயப்பட்ட நிலத்தை மட்டும் எந்தவித தடையுமின்றி விடுவிக்குமாறு மாவட்டச்செயலர் உட்பட அனைவரும் கோரியிருந்தபோதும் அது விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பில் நாம் மீன்பிடி அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு சென்றோம். மீன்பிடி அமைச்சரும் அதிர்ச்சி அடைந்து மன்னார் மாவட்டமே வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமானதா எனக் கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்த நிலையில் கடந்த மாதம் மீன்பிடி அமைச்சின் அதிகாரிகள், நாரா, நெக்டப் அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் உரிய இடத்தை நேரில் பார்வையிட்டுச் சென்றிருந்தனர். இதனையடுத்து கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுத்திட்டத்துக்குரிய 2 ஆயிரத்து 900 ஏக்கரை நிலத்தை விடுவிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது - என்றார்.

(த - 101)

# மிருக எச்சங்கள் குவிந்து மயானத்தில் துர்நாற்றம்

### ஊர்மக்கள் கடும் விசனம்

தென்மராட்சி ஏப். 15
மனிதர்களை அடக்கம் செய்யும் மயானத்தில் இறந்த நாய்களையும் கோழிக் கழிவுகளையும் மிருகங்களின் எச்சங்களையும் இனந்தெரியாதோர் வீசிவிட்டுச் செல்வதால் அங்கு உள்நுழைய முடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகிறது.

அத்துடன் மயானத்தைச் சுற்றிப் பற்றைகள் காணப்படுகின்றன. அங்குள்ள கிணறு தேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச சபையினரால் பராமரிக்கப்படும் இந்த மயானம் கல்வயல், மட்டுவில், சரசாலை, மீசாலை வடக்கு, வேம்பிராய், மந்துவில், மீசாலைமேற்கு, மீசாலை கிழக்கு, இராமாவில் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களால் பயன்படுத்தப்படுகிறது.

இந்த மயானம் வேலிகள் இன்றி திறந்தவெளி போலக் காணப்படுவதாலும், சுற்றாடல் ஒழுங்காகப் பராமரிக்கப்படாதமையாலும் காடாகிக் காணப்படுகின்றது.

சிலர் கோழிகளினதும், இறைச்சிக் கடைகளில் காணப்படும் கால்நடைகளினதும் எச்சங்களை இரவிரவாக இங்கு கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனால் வீதியில் செல்வோர் துர்நாற்றம் சகிக்க முடியாமல் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்கின்றன்ர் என ஊர்மக்கள் தெரிவித்தனர்.

பிரதேச சபையில் போதிய ஆளணி இன்மையால் சபை எல்லைக்குட்பட்ட அனைத்து மயானங்களையும் துப்புரவு செய்யமுடிவதில்லை. மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் வேம்பிராய் மயானத்தில் சூரிய மின்கல விளக்குப் பொருத்தப்பட்டது. இரவுவேளை போதிய வெளிச்சம் காணப்பட்டது. அந்த வேளையில் இவ்வாறான கழிவுகள் கொட்டப்படுவதில்லை. மயானத்தில் வெளிச்சம் காணப்படுவது தமக்கு இடைஞ்சலெனக் கருதிய சிலர் மின் விளக்கைச் சேதமாக்கிவிட்டனர் எனவும், அதன் பின்னரே இரவு வேளையில் கால்நடைகளின் கழிவுகள் கொட்டப்படுவதாகவும் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

(த - 9)

# மகிந்தவை அதிகாரத்துக்கு கொண்டுவர சிலர் முயற்சி

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.15



முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். அதற்காகவே அவர்கள் சைட்டம் எதிர்ப்பைப் பயன்படுத்துகிறார்கள்.
இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.
கண்டி தெல்தெனிய வைத்தியசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
" அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை. அகிம்சைவாத தலைவர் என்ற வகையில் அரச தலைவர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கியுள்ளார். புகையிலை, மருந்து விற்பனை நிறுவனங்கள் என்பனவற்றுக்கு எதிராக செயற்பட்ட நாம், மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அடிபணியத் தயார் இல்லை. நல்லாட்சி மக்களுக்காகவே உள்ளது. மன்னரைப் போன்று செயற்பட்ட கடந்த கால ஆட்சியாளருக்குப் பயந்து மறைந்திருந்தவர்கள் தற்போது, அரசுக்கு எதிர்ப்புக்களை வெளியிடுகிறார்கள். நாட்டில் அழிவுகளை ஏற்படுத்தியவர்களுக்கு அதிகாரத்துக்கு வர இடமளிக்கப்பட மாட்டாது. என்றார். (ஐ)

# இடைநிறுத்திய பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.15 ,
சாவகச்சேரியிலிருந்து சங்கானை வரையான 775 மார்க்க பேருந்து சேவையை இ.போ.ச. யாழ்ப்பாண சாலை கடந்த இரண்டு மாதங்களாக சுன்னாகம் வரை நடத்துவதால், இந்தச் சேவையைப் பயன்படுத்திய பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு மாகாண போக்குவரத்து அமைச்சர் தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர்கள் ஆகியோர் உட்பட அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயன்கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.
தினமும் காலை 6.30 மணிக்கு சங்கானையிலிருந்து புறப்படும் 811 மார்க்க மானிப்பாய் சாவகச்சேரி பேருந்து சேவை, பின்னர் மாலை 4.30 மணிக்கு சங்கானையிலிருந்து புறப்பட்டுச் செல்கிறது.
யாழ்.கோண்டாவில் சாலையில் பணிபுரியும் அதிகாரிகள் பணியாளர்களுக்காகவே இந்தச் சேவை நடாத்தப்படுகிறது.
கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்க ணக்கான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த மார்க்கத்தில் தனியார் பேருந்து சேவை இடம்பெறாததால் மக்கள் இ.போ.ச.பேருந்தின் சேவைகளையே நீண்ட காலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.
இந்தச் சேவையும் தற்போது காலையும் மாலையும் மட்டும் அதுவும் வேறு மார்க்க பேருந்து இந்த மார்க்கத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது
எனவே இடைநிறுத்தப்பட்டுள்ள பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-9)

# டெங்கு நோயாளர்களுக்கு நவீன வசதிகளுடன் சிகிச்சைப் பிரிவுகள்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,ஏப்.15
டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக பிரதான வைத்தியசாலைகளுக்கு நவீன வசதிகளைக் கொண்ட சிகிச்சைப்பிரிவும், விடுதித்தொகுதியும் அமைக்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, பாணந்துறை வைத்தியசாலை, மாத்தறை, கராப்பிட்டிய, திருகோணமலை, மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் நவீன வசதிகளைக் கொண்ட சிகிச்சை முறைக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான வைத்தியர்களும், தாதியர்களும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. வைத்தியசாலைகளின் புள்ளிவிபரங்களுக்கு அமைய 30 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இந்த வருடத்தின் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை ஏழு மாவட்டங்களில் டெங்கு நோய் அதிகரித்துள்ளதாக டெங்கு நோய் ஒழிப்பு பிரிவின் தலைவர் டொக்டர் ஹசித்த திசேரா தெரிவித்துள்ளார்.
திருகோணமலை மாவட்டத்தின் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.
இதேவளை பாடசாலை விடுமுறையின் பின்னர் பாடசாலைகளை ஆரம்பிக்கும் போது, பாடசாலை வளாகத்தைச் சுத்தமாக வைத்திருப்பது பற்றி சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

முல்லைத்தீவு, ஏப். 15
தமிழ் சிங்கள புத்தாண்டு வழிபாட்டுக்காக ஆலயத்துக்குச் சென்ற இளைஞன் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.
குறித்த இளைஞன் புதுவருடதினத்தை முன்னிட்டு முள்ளியவளையில் இருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் சென்றார்.
அவர் வற்றாப்பளை சந்தியில் விபத்துக்குள்ளான நிலையில், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசரசிகிச்சைப்பிரில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-7)


# கர்ப்பவதிகளுக்கு காலாவதியான உணவுப்பொருள்கள் விநியோகம்

மட்டக்களப்பு,ஏப்.15
மட்டக்களப்பு வெல்லாவெளியில் கர்ப்பவதிகளுக்குக் காலாவதியான, பழுதடைந்த உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சுகாதாரத்துக்கு முரணான வகையில் இருக்கும் இந்த உணவுப் பொருள்கள் கர்ப்பவதிகளுக்கு வழங்கப்படும் அரச மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.
கர்ப்பவதிகளுக்கு அரசால் இரண்டாயிரம் பெறுமதித் தொகையில் ஒவ்வொரு மாதமும் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த மானியத்தில், கருவாடு, தானியங்கள், பால்மா வகைகள் போன்ற பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
இவற்றில் பழுதடைந்த, புளுப்பிடித்த, காலாவதியான உணவுப்பொருள்கள் பிரதேசத்தில் உள்ள கூட்டுற வுக்கடை களில் வழங்கப்பட்டுள்ளன - என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
இந்த உணவுப் பொருள்கள் தொடர்பாக வெல்லாவெளி சுகாதாரப் பரிசோதகர் மற்றும் வைத்தியர்கள் இவற்றைப் பாராமல் வழங்குவது ஏன் ? என பாதிக்கப்பட்ட கர்ப்பவதிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ)

# லிந்துலையில் மண்சரிவால் வீடுகள் சேதம்

நுவரெலியா, ஏப்.15
நுவரெலியா லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லிந்துலை சென்றெகுலார்ஸ் தோட்டத்தில் நேற்று முன்தினம் காலை மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.
இந்தக் குடியிருப்பு பகுதியில் பின்புறத்தில் இருந்த பெரிய மண்மேடே சரிந்து வீட்டின் மீது விழுந்துள்ளது.
அத்தோடு மேற்படி பாதிக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள 6 பேரைப் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கும், நிவாரண உதவிகளைப் பெற்று கொடுப்பதற்கும் நடவடிக்கைகள்மேற்கொண்டுவருவதாகத்தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ-ய-43)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலனில் அக்கறை தேவை.



**இடபம்:** பேச்சு, செயலில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர் பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். புத்திரர் விரும்பியபொருளைவாங்கிக்கொடுப்பீர்கள்.



**மிதுனம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் உயரும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் பணிபுரிவர்.



**கடகம்:** உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாகவெளியூர்செல்வர். பெண்களுக்கு வீட்டுச்செலவு அதிகரிக்கும்.



**சிங்கம்:** அன்றாடப்பணிகூட சுமையாகத் தோன்றலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான அளவில் லாபம் கிடைக்கும். பணியாளர்கள்பணிச்சுமைக்கு ஆளாகலாம். பணம், நகை இரவல்கொடுக்க வாங்க வேண்டாம்.



**கன்னி:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் விரும்பிய பணி மாற்றம் கிடைக்கப்பெறுவர்.



**துலாம்:** உங்களின் பேச்சு சிலரை அதிருப்திக்கு ஆளாக்கலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்படச் சமாளிப்பர்.



**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சிறப்பாக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.



**தனுசு:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும்.



**மகரம்:** நண்பரின் உதவி கிடைக்கும். முக்கிய விடயத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**கும்பம்:** வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தாராள வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.



**மீனம்:** முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்கவேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம்மிதமாகஇருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களின் எதிர்ப்பைச்சந்திப்பர். பயணத் திட்டத்தில் திடீர் மாற்றம் உண்டாகலாம்.

# அங்கொட லொக்கா சரணடைவதாக அறிவிப்பு

பாதாள உலகக்குழு தலைவர் அங்கொட லொக்கா சரணடைவதாகத் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார். அண்மையில் களுத்துறையில் சமயங் உள்ளிட்ட பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் ஐந்து பேர் மற்றும் இரண்டு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் அங்கொட லொக்காவுக்குத் தொடர்பு உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது. அங்கொட லொக்கா தற்போது நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெளிநாடு ஒன்றிலிருந்து பாதாள உலகக்குழுச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக் குத் தொடர்பை ஏற்படுத்தி தான் சரணடைய விரும்புகிறேன் என அறிவித்துள்ளார். இந்தோனேசியாவிலிருந்து இந்த அழைப்பு எடுக் கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட் டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தம்மை கொலை செய்யாவிட்டால் சரணடையத் தயார் என்றும் அங்கொட லொக்கா தெரிவித்துள்ளார். நிந்தனையின்றி சரணடைய வேண்டும் எனவும், கொலைக்கு பயன்படுத்திய ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் எனவும் பொலிஸ் உயரதிகாரிகள் அங்கொட லொக்காவுக்கு அறிவித்துள்ளனர். (ஐ)





கிளிநொச்சி-மூன்றாம்வாய்க்கால்பன்னங்கண்டிபிள்ளையார்ஆலயத்தின்தேர்த்திருவிழாநேற்றுக்காலைஇடம்பெற்றது. இன்றுசனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (ய)

## மரண அறிவித்தல்கள்

### சின்னக்குட்டி இளந்தளைசிங்கம்

**(உரிமையாளர் - கோகுலன் ஸ்ரோர்ஸ், இல.19, பஸ் நிலையம், வவுனியா)**



காரைநகர், களபூமி, பொன்னாவளையை பிறப்பிடமாகவும், இல.36A, வைரவப்புளியங்குளம், வவுனியாவை நிரந்தரவதிவிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி இளந்தளைசிங்கம் 13.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபூபதிமலரின் அன்புக் கணவரும், சின்னக்குட்டி - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு புத்திரனும், ஆறுமுகம் - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும், கோகுலதாசன் (முகாமையாளர் - RISK Compliance Fair Fist Insurance Limited), வித்தியா (பொறியியலாளர் Marin pvt (Ltd)), வைகுந்தன் (உரிமையாளர் - கோகுலன் ஸ்ரோர்ஸ்), சுவேந்தன் (பொறியியலாளர் - Dialog axiata PlC) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. பொன்னுத்துரை சிவபாலனின் (போதனா வைத்தியசாலை, குருநாகல்) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லாச்சி, சிவகாமன், தெய்வானை, சுந்தரம்மா, சிவசுப்பிரமணியம், சிவயோகம் மற்றும் திருமதி அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையா, காசிப்பிள்ளை கந்தையா, இராசநாயகம் கந்தையா, இராசா கந்தையா, சுப்பிர மணியம், சண்முகலிங்கம் மற்றும் ஆறுமுகம் சிவபாத சுந்தரலிங்கம், ஆறுமுகம் கனகலிங்கம் (ஆதி விநாயகர் ஸ்ரோர்ஸ்), ஆண்டி ஐயா, அம்பலயமுருகர், திருமதி தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை, திருமதி பொன்னுத்துரை சரஸ்வதி ஆகியோரின் சம்மந்தியும், திருமதி சிவ தேவிகனகலிங்கம், திருமதி சிவபாதசுந்தரலிங்கம் சந்திரவதி (ஓய்வுநிலை சேவை உத்தியோகத்தர் - வவுனியா வைத்தியசாலை) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.36A,**
**வைரவப்புளியங்குளம், வவுனியா**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0771118874**



### நாகலிங்கம் குமாரலிங்கம்

கற்பக்குளை, உடுவிலைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குமாரலிங்கம் நேற்று (14.04.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், சின்னப்பொடி - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், வனிதாவின் அன்புக் கணவரும், பிரசன்னா (O/L - யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், லிங்கேஸ்வரன், யோகலிங்கம், சண்முகலிங்கம் (நோர்வே), சத்தியலிங்கம், லிங்கராணி, யோகராணி (ஜேர்மனி), தவராணி (புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரணிதரன், சுரேஸ்குமார், செல்வமலர் ஆகியோரின் சகலனும், கனகலிங்கம் (லிங்கம்), தவமணி, ஜெயந்தா ரஜனி (நோர்வே), கௌசல்யா நாகராஜா, ஆனந்தராஜா (ஜேர்மனி), பிரபாகரன் (சவுதி), யாழினி, தயாழினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சுவீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



தோற்றம்
10 . 01 . 1948

மறைவு
13 . 04 . 2017

### பிரான்சிஸ் அடல்பேட் றாகல்


பிரான்சிஸ் அடல்பேட் றாகல் வியாழக்கிழமை 13.04.2017 வவுனியாவில் காலமானார்.

அன்னார் சோதிமலரின் (கொடிகாமம்) அன்புக் கணவரும், றொசான் (பேராதனைப் பல்கலைக்கழகம்), செஸ்டர் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவர்ணலதாவின் (பேராதனைப் பல்கலைக்கழகம்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.9.2 ஆம் ஒழுங்கை, வைரவப்புளியங்குளம், வவுனியாவில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று (15.04.2017) சனிக்கிழமை காலை 9 மணியளவில் கரப்பன்காடு கிறிஸ்து அரசர் ஆலயத்துக்கு ஆசிர்வதிக்கப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் இறம்பைக்குள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**



### இளையதம்பி சபாரட்ணம்

**(ஓய்வுநிலை ஊழியர் - யாழ். தபால்நிலையம்)**

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் பணிக்கர்வளவு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், தற்போது கனடா ( Canada Toronto) வில் வசித்தவருமான இளையதம்பி சபாரட்ணம் (யாழ்.தபால்நிலைய ஓய்வு நிலைய ஊழியர்) 12.04.2017 புதன்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா - அழகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், பவானி (Canada), குமுதினி (Canada), காலஞ்சென்ற சாந்தினி (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ராமச்சந்திரநாதன் (Canada) மற்றும் இராசலிங்கம் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் ஏகாயதாட்சி, யோகாம்பிகை, கதிரமலைநாதன் (முருகன் - நல்லூர்ப.நோ.கூ.ச. எரிபொருள் நிரப்பு நிலையம்), பத்மராஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இந்திராணி, குலசிங்கம் , காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் இராசலெட்சுமி ஆகியோரின் அன்பு சகலனும், சர்மிலா, அஜிதன், ரூபேசன், மகிஷா, சுதர்சன், துவாரகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பலாலிவீதி, திருநெல்வேலி வடக்கு (றோயல் மிருக வைத்தியசாலை முன்பாக) அவரது மைத்துனர் கதிரமலைநாதன் (முருகன்) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.** **தகவல்: குடும்பத்தினர்.**

**கு.வெங்கடேஸ் - 077 382 5654, க. மயூரன் - 077 044 7103/ 021 222 1996, குமுதினி - 0019 0579 35602**

# இரு வெவ்வேறு விபத்துக்களில் மூவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஏப்.15

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வெவ்வேறு இடங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என்று கொக்கட்டிச்சோலைப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை மற்றும் தாந்தாமலை ஆகிய முதன்மை வீதிகளில் இடம்பெற்ற இந்த விபத்துக்களில் இரு பேருந்துகள், இரு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் கார் என்பன சிக்கிக் கொண்டுள்ளன.

கொக்கட்டிச்சோலை முதன்மை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த வேளையில் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த ஒருவர், மகிழடித்தீவு பிரதேச வைத்தியசாலையிலும், இருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகிழடித்தீவிலிருந்து கொக்கட்டிச்சோலை நோக்கி பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து, வீதியில் முன்னால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதிய அதேவேளை, வீதியினருகே நிறுத்தப்பட்டிருந்த கார் மற்றும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளின் மீதும் மோதி விபத்துக்குள்ளானது.



இதேவேளை கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை முதன்மை வீதியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரங்களுடன் மோதி வயலுக்குள் விழுந்து நொருங்கியுள்ளது. பேருந்து மோதியதில் வீதியினருகே நின்றிருந்த பனை மரம் மற்றும் வேம்பு மரம் என்பன பிடுங்கி வீசப்பட்டுள்ளன. இந்த விபத்தில் பேருந்தின் சாரதியும் மற்றும் பயணிகளும் எதுவித ஆபத்துமின்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். விபத்தை ஏற்படுத்திய இந்த இருபேருந்துகளின் உரிமையாளரும் ஒருவரே என்பது விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

(ஐ-46)

## கிண்ணியாவில் கால்நடைகள் களவு சந்தேகநபர் கைது

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கால்நடைகள் தொடர்ச்சியாகக் காணாமல் போவதாக கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட கிண்ணியா பொலிஸ் சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் நேற்று இரவு ஒருவரைக் கைது செய்துள்ளனர். களவெடுத்த ஒரு மாட்டின் இறைச்சி 25கிலோவைவிற்ற சந்தேகத்தின் பேரில் இடிமன் நகர் கிண்ணயாவைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அந்த இறைச் சியை வாங்கியகுற்றத்துக்காக ஜாயா வீதி கிண்ணியா வைச் சேர்ந்த ஹோட்டல் உரிமையாளரார் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.

077 262 6944

**காணி விற்பனை**

சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டையில் 5½ பரப்புக் காணி விற்பனைக்கு

தொ.பே. 077 328 8795

**வாடகைக்கு**

ஆனைப்பந்திச் சந்திக்கு அண்மையாக நாவலர் வீதியில் இருவர் மட்டும் வசிக்கக்கூடிய அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.

072 660 1001



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

## முதலாம் ஆண்டு நினைவு நாள்



அமரர் திருமதி
**அன்னலெட்சுமி சரவணமுத்து**


மலர்வு 03.06.1930 — உதிர்வு 26.04.2016

திதி: சங்கடஹரசதுர்த்தி
(15.04.2017)

**வாழும் காலம் யாவுமே**
**தாயின் பாதம் சொர்க்கமே**

என்றென்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
171, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



மண்ணில் 06 . 08 . 1932 — விண்ணில் 14 . 04 . 2017

**திருமதி தேவநாயகி இராசையா**
(சங்கரத்தை, வட்டுக்கோட்டை)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசையா தேவநாயகி நேற்று (14.04.2017) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரம் இராசையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - சம்பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திருமதி சிவநாயகி (நல்லூர்), குணநாயகி, காலஞ்சென்ற திலகவதி ஆகியோரின் சகோதரியும், சண்முகநாதன் (ஆனந்தன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சிவமலர் (வவுனியா), சிவனேசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், வடமாகாண பிரதம கணக்காளர் அலுவலகம்) ஆகியோரின் அன்புத் தாயும், சுழிபுரம் கிழக்கை சேர்ந்த சிறீசக்திவேல், (முகாமைத்துவ உதவியாளர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் வவுனியா), திருமதி ச. கலைமகள் (பாலாவோடை), திருமதி சி. சுமதி (சரசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், சாரங்கன், சாம்பவி, பிரவீணா, பிரசங்கன், பிருந்தாவன், மகாமதுசன், டக்சியா மற்றும் அமுதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பட்டினசபை வீதி, சுதுமலை அம்மன் கோயிலடியில் அமைந்துள்ள மருமகளான ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி புஸ்பராணி அவர்களின் இல்லத்தில் நடைபெற்று, வழுக்கையாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம்செய்யப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பட்டினசபை வீதி, (TC Lane)
சுதுமலை அம்மன்கோயில் பின் வீதி, சுதுமலை.

தகவல் :
குடும்பத்தினர்.

தொ.பே. 077 215 8555

## ஷஷ்டியப்த பூர்த்தி விழா மணிவிழா அழைப்பு



நிகழும் மங்கலகரமான ஏவிளம்பி வருடம் சித்திரை 2 ஆம் நாள் (15.04.2017) சனிக்கிழமை அனுஷ நட்சத்திரமும் சதுர்த்தியும் உத்தராயணமும் சித்தியோகமும் கூடிய சுபவேளையில்

**யோகீஸ்வரக் குருக்கள்**
**ஞானேஸ்வரக் குருக்கள் ஸ்ரீமதி கலாவதி**

தம்பதிகளுக்கு மாதா பிதா நல்லாசிளுடன் பள்ளம்புலம் முருகன் அத்தியடி விநாயகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருளுடன் வவுனியா கூமாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இல.19,2 ஆம் ஒழுங்கை,
கூமாங்குளம், வவுனியா.

தங்கள் நல்வரவை நாடும்
குடும்பத்தினர்.



**சிவன் ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
076 585 9977 , 077 835 7307

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.

நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

## ஆறாம் ஆண்டு நினைவுநாள்



செல்வன்
**சிறீகாந்தன் நிமலன்**

தாயின் மடியில் 02.03.1997
இறைவன் அடியில் 15.04.2011

நிமலா!
பதினான்கு வயதினிலே உனைப்பிரிய
நாம் என்ன பாவம் செய்தோமோ,
ஏங்கித் தவிக்கிறோம் ஆறு
ஆண்டுகளாக,
நிமலா! நீ எப்போது வருவாய் என்று...

காரந்தன்,
நீர்வேலி மேற்கு.

உன் அன்பான
அப்பா, அம்மா, அண்ணா,
அண்ணி, அக்கா, அத்தான்

# வெளிநாடுகளிடம் அரச வங்கி கடன்கள்

## நாடாளுமன்றுக்கு அடுத்த மாதம் அறிக்கை

கொழும்பு,ஏப்.15

தற்போதைய கூட்டு அரசு இதுவரையில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான அறிக்கை அடுத்த மாதம் நாடாளுமன்றுக்குச் சமர்பிக்கப்படும் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரசால் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் வெளிநாட்டுக் கடன்களில், அதிகளவானவை கடந்த அரசால் பெறப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டவை. எவ்வாறாயினும் அது தொடர்பான முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கை மே மாதம் நாடளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்படும்."-என்றார். (ஐ)

## சந்தேகநபர் தப்பியோட்டம்

கொழும்பு,ஏப்.15

பொலிஸ் நிலையத்திலுள்ள சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர்தப்பிச்சென்றுள்ளார்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாணந்துறைத் தெற்கு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் தப்பிச் செல்லும் போது பெண் பொலிஸ் அதிகாரியொருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருமே பொலிஸ் நிலை யத்தில் கடமையில் இருந்துள்ளனர் எனக் கூறப்படு கின்றது.

இவர்கள் தங்களது கடமையில் அசண்டையீனமாக இருந்துள்ளனர் எனத் தெரிவித்து, இவர்களுக்கு எதிராகஒழுக்காற்றுவிசாரணை நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட இருவர் சாவு

கொழும்பு:ஏப்.15

பன்னல பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஆண்கள் இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

30 மற்றும் 32 வயதுடைய ஆண்கள் இருவரே கொலை செய்யப்பட்டுள்ளனர். வாய்த்தர்க்கம் காரணமாக ஏற்பட்ட மோதலில் இந்தக் கொலைகள் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், இறப்பு விசாரணைகளும்முன்னெடுக்கப்ப ட்டுள்ளன. (ஐ)

### கொத்தலாவல துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்

# சந்தேகநபரைக் கைது செய்ய சிறப்புப் பொலிஸ் குழு நியமிப்பு

கொழும்பு,ஏப்.15

மாலபே கடுவலை பிரதான வீதியின், கொத்தலாவல பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சந்தேகநபரைக் கைது செய்வதற்கு சிறப்புப் பொலிஸ் குழுவொன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



நுகேகொடை பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணை இடம்பெறுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடுவலை கொத்தலாவல சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர். இது திட்டமிட்டு, குற்றச் செயல்களில் ஈடுபடும் இரண்டு குழுக்க ளுக்கு இடையிலான மோதலின் விளைவால் இடம்பெற்றது என்று எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர் போமிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான ருவன் துஷார என்ற பிடலி துஷார எனவும், இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் போதைப் பொருள் வர்த்தகம் உட்பட பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த நபர் மீது, கடுவலை வெலேசந்தி பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதுடன், அவர் அதில் உயிர் தப்பியவர் எனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை பிடலி துஷார, அண்மையில் கொலை செய்யப்பட்ட பாதாள உலக குற்றவாளியான சமயங் என்பவரின் எதிரணியை சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றைய நபர் 49 வயதான கொத்தலாவலகே பியவங்ச சோமகுப்த என்பவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவர். அவர் வீட்டுக்குத் தேவையான நிற பூச்சைக் கொள்வனவு செய்வதற்காக பிரதான வீதிக்குச் சென்றிருந்த போது இந்த சம்பவத்தில் சிக்கியுள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் இருந்து ரி. 56 ரக துப்பாக்கிக்குரிய 18 தோட்டாக்களை பொலிஸார் மீட்டுள்ள னர். (ஐ)

## ஓய்வூதியத்தை நிறுத்தும் அரசின் முயற்சிக்கு எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.15

ஓய்வூதியத்தை இல்லாமல் செய்வதற்கான அரசின் முயற்சிக்கு எதிராக, அரச அதிகாரிகள் குரல்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஓய்வூதியப் பாதுகாப்புச் சேவை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஓய்வூதியப் பாதுகாப்புச் சேவை மத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் ஜானக துஷார தெரிவித்ததாவது;

தொழிலாளர் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர அண்மையில் கூறிய கருத்தின்படி ஓய்வூதியத்தை முழுமையாக இல்லாமல் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது தெரிய வந்துள்ளது. தற்போது கூட அரச ஊழியர்கள் ஓய்வூதியங்கள் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதனை முழுமையாக இல்லாமல் செய்வதற்கான திட்டத்துக்கு எதிராக அரச ஊழியர்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஓய்வூதியத்தை இல்லாமல்செய்யும் அரசின் திட்டத்தை தோற்கடிக்க முடியும். -என்றார். (ஐ)

## இரு குழுக்களிடையே மோதல்; ஆறு பேர் வைத்தியசாலையில்

கொழும்பு,ஏப்.15

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேபீல்ட் தோட்டத்தில் இடம்பெற்ற ஆலய நிகழ்வின் போது, இரண்டு குழுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொட்டகலை மேபீல்ட் தோட்டத்தில் நேற்று முன்தினம் ஆலய நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், இரண்டுகுழுக்களுகிடையே முறுகல் நிலை ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியது.

இனையடுத்து கூரிய ஆயுதங்களால் வெட்டு மற்றும் தாக்குதல், மிளகாய் தூள் தூவல் காரணமாக காயமடைந்த ஆறு பேர் கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்என்று வைத்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

காயங்களுக்கு உள்ளானவர்களில் மூன்று பெண்களும், மூன்று ஆண்களும் அடங்குகின்றனர்.

சம்பவம் தொடர்பாக பலர் கைது செய்யப்படவிருப்பதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸ் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## கிதலகமவில் மின்னல் தாக்கி 10 வீடுகள் சேதம்

கொழும்பு,ஏப்.15

மாத்தறை நிஹறகொட கிதலகம பிரதேசத்தில் 10 வீடுகளில் மின்னல் தாக்கியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு கடுமையாக மழை பெய்த போது இவ்வாறு மின்னல் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்தப்பகுதியில் 10 வீடுகளில் மின்னல் தாக்கம் ஏற்பட்டு, வீடுகளும் சேதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விபத்தில் மாணவி சாவு

நொச்சியாகமை லிதவேவ பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 18 வயதுடைய உயர்தர் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். நொச்சியாகமை பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது

பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்த விடுமுறை காலப்பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் தொழில் புரிவதற்கு குறித்த மாணவி சென்றுள்ளார்.

புத்தாண்டுக்காக ஆடைகளை வாங்குவதற்கும், தனது கல்விச் செலவுக்கும் பணம் இல்லாமை காரணமாக இவ்வாறு விடுமுறை காலப் பகுதியில் மாணவி தொழிலுக்குச் சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மாணவி தொழிலுக்குச் சென்று தனது நண்பியுடன் உந்துருளியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, பேருந்து ஒன்றுடன் மோதுண்டுள்ளார். இந்த நிலையில் படுகாயமடைந்த மாணவி நொச்சியாகமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுர மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார்.

அவரது நண்பி படுகாயமடைந்துள்ள நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ)

# 40 ஆயிரம் ஆசிரியர்களை புதிதாக இணைக்கத் திட்டம்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.15

ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளை அடையாளம் கண்டு, ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். எதிர்வரும் இரண்டு வருடங்களில் 40 ஆயிரம் ஆசிரியர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

குளியாப்பிட்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது;



"நாட்டின் ஜீவநாடி சிறுவர் சமூகத்தினர் ஆவார். எதிர்வரும் இரண்டு வருடங்களில் சிறுவர் சமுகத்தினர் மத்தியில் எண்ணங்களின் தரத்தை மேம்படுத்தவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு சிறுவர்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களைச் சேவையில் இணைத்துக் கொள்ளும் போது, அவர்களது பாடங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்" -என்றார். (ஐ)



இயேசுக் கிறிஸ்து பாடுபட்டு உயிர்துறந்த நேற்றைய தினம் உலக அளவில் மிகவும் உருக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஸ்பெய்னின் மலாகா என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் நடைபெற்ற திருச்சிலுவைப் (சிலுவைப்பாதை) பவனியின் ஒளிப்படமே இது. (ம)

# செனகல்லில் தீ விபத்து; 22 பேர் சாவு

கவுனாஸ், ஏப். 15

செனகல் நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள டம்பகண்டா மாகாணத்தின் மெதீனா கவுனாஸ் நகரத்தில் பிரார்த்தனைக்காகப் போடப்பட்ட முஸ்லிம் மக்களின் ஓய்வு இல்லத்தில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து 22 பேர் உயிரிழந்தனர். தீ இலகுவில் பற்றிப்பிடிக்கக்கூடிய சாதனங்கள் அதிகளவில் இருந்ததால், தீ மிக விரைவாகப் பரவியது.

கிட்டத்தட்ட 50 பேர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் அச்சம் வெளியிட்டுள்ளன.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து நேற்று மதியம் வரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக கடந்த 2010 ஆம் ஆண்டில் செனேகல்லில் இதேபோன்று நிகழ்ந்த வேறொரு விபத்தில் 6 பேர் உயிரிழந்திருந்தனர். மேலும் பலர்" படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கைதிகளின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டார் பாப்பரசர் பிரான்சிஸ்

உரோம், ஏப். 15

உரோமில் நேற்றுமுன்தினம் ஒப்புக்கொடுக்கப்பட்ட பெரிய வியாழன் திருப்பலியில் இம்முறை கைதிகளின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டார் பாப்பரசர்.

உரோமன் கத்தோலிக்கர்களின் தவக்கால நோன்பில் முக்கிய அம்சமாக பெரிய வியாழன் திருப்பலி உள்ளது. இயேசு தனது சீடர்களின் பாதங்களைக் கழுவியதுபோல் பெரிய வியாழன் திருப்பலிகளை ஒப்புக்கொடுக்கும் திருத்தந்தையர்கள், சிலரின் பாதங்களைக் கழுவுவது வழக்கமாகும்.

உரோமில் பெரிய வியாழன் திருப்பலியை ஒப்புக்கொடுத்த திருந்தந்தை இம்முறை சிறைக்கைதிகளின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டார்.

கடந்த வருடம் சிரியாவில் இருந்து சென்ற அகதிகளின் பாதங்களைப் பாப்பரசர் கழுவினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# ஆப்கானில் ஐ.எஸ்ஸின் தளம் மீது பாய்ந்தது 'வெடிகுண்டுகளின் தாய்'

## அமெரிக்கா மற்றொரு அதிரடி




காபுல், ஏப். 15

ஆப்கானிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு செயற்பட்டு வந்த இடத்தில் அணுகுண்டு அல்லாத மிகப்பெரிய குண்டை அமெரிக்கா வீசியது என்று அந்த நாட்டின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்தது.

'வெடிகுண்டுகளின் தாய்' என்று அழைக்கப்படும் சக்திவாய்ந்த குண்டான ஜி.பி.யு. - 43 ரக குண்டே அமெரிக்காவால் அவ்வாறு வீசப்பட்டது. அமெரிக்கத் தயாரிப்பில் அணுகுண்டுகள் இல்லாத ரகத்தில் இதுதான் மிகப் பெரிய வெடிகுண்டு. 9 ஆயிரத்து 797 கிலோ எடை கொண்ட இந்த மிகப்பெரிய வெடிகுண்டை ஈராக் போர் தொடங்குவதற்கு முன் கடந்த 2003 ஆம் ஆண்டு அமெரிக்கா பரிசோதித்துப் பார்த்தது. 20 அடி நீளம் கொண்ட இதில், 9 ஆயிரம் தொன் வெடிபொருள்கள் அடங்கியிருக்கும்.

ஆனால், இதுவரை எந்தப் போரிலும் அமெரிக்கா இதைப் பயன்படுத்தியதில்லை. ட்ரம்பின் கட்டளைப்படி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக முதல்முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"பாகிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள ஆச்சின் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுங்கியுள்ள மலைக்குகைகளில் வெடிகுண்டு வீசப்பட்டது. ஆப்கான் நேரப்படி நேற்று இரவு (நேற்றுமுன்தினம்) 7.32 மணிக்கு அது வீசப்பட்டது. ஐ.எஸ். தீவிரவாதிகள் மலைக்குகைகளைக் கேடயமாகப் பயன்படுத்தி செயற்படுகின்றனர். அதனை தகர்க்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை" என்று பென்டகனின் செய்தித் தொடர்பாளர் அடம் தெரிவித்தார். (ம)




# தமிழில் புதுவரு தெரிவித்தார் ந

புதுடெல்லி, ஏப். 15

தமிழ் சிங்களப் புத்தாண்டான நேற்று இந்திய தலைமை அமைச்சர் மோடி தமிழில் வாழ்த்துத் தெரிவித்தார்.

தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில், 'என் தமிழ் சகோதர சகோதரிகளுக்கு இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த ஆண்டு முழுவதும் மகிழ்ச்சியும் நல்ல ஆரோக்கியமும் வளமும் கிடைக்கட்டும், என்று அவர் தனது வாழ்த்தைத் தெரிவித்

# லிபியக் கடல் பகுதியில் அகதிகள் படகு விபத்து

## 97 பேரைக் காணவில்லை; தேடும் பணிகள் துரிதகதி


லிபியாவுக்குச் சொந்தமான கடல் பரப்பில் அகதிகள் படகொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 97 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அவர்களைத் தேடும் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரியா, சூடான், சோமாலியா, எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் லிபியாவுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து மத்திய தரைக்கடலின் வழியாக இத்தாலி நோக்கிச் செல்கின்றனர். அவ்வாறு சென்ற படகொன்று புறப்பட்ட சிறிது நேரத்தில் விபத்துக்கு உள்ளானதிலேயே அதில் பயணித்த 97 பேர் காணமல் போயுள்ளனர்.

இந்த வருடத்தில் மட்டும் லிபியாவில் இருந்து இத்தாலிக்கு 24 ஆயிரம் அகதிகள் சென்றடைந்துள்ளனர். 690 பேர் படகு மூழ்கியும் ஏனைய காரணிகளாலும் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா குறிப்பிடுகிறது. (ம)



அமெரிக்கா - மெக்சிக்கோ எல்லையில் தற்காலிக எல்லைச் சுவர்கள் அ
நிறைவடைந்துள்ளன என்று அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியி
பரப்புரையில், தான் அமெரிக்க அதிபரானால் மெக்சிக்கோ பகுதியினூடாக
கட்டுப்படுத்த தடுப்புச் சுவர் அமைக்கப்படும் என்று வலியுறுத்தியமை



# அசுத்தமான குடிதண்ணீரை அருந்துவோர் 200 கோடி

## உலக சுகாதார அமைப்பு வெளியிட்டது திடுக்கிடும் தகவல்

வொஷிங்டன், ஏப். 15
உலக அளவில் 200 கோடி மக்கள் மிகவும் அசுத்தமான குடி தண்ணீரைப் பருகுகின்றனர் என்று உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டது.
இந்த 200 கோடி பேரில் 2 லட்சம் மக்கள் கழிவுகளில் இருந்தே தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறுகின்றனர். வருடா வருடம் இவ்வாறு அசுத்தமான குடிதண்ணீரைப் பயன்படுத்தும் 5 லட்சம் பேர் வயிறுப்போக்கால் உயிரிழக்கின்றனர்.
வறட்சி அதிகமுள்ள ஆபிரிக்க நாடுகளில் அசுத்த தண்ணீரின் பயன்பாடு மிக அதிகமாக உள்ளது என்று அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது.
"சுத்தமான குடிதண்ணீரும், சுகாதாரமும் கிடைக்க உலகநாடுகள் இணைந்து வியத்தகு முன்னேற்றங்களை மேற்கொள்ள வேண்டும். உலகநாடுகள் ஒன்றிணைந்து இந்த முக்கிய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அனைவரும் சுத்தமான குடிதண்ணீரைப் பருக, தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய வாழ்வுக்கு அனைத்து நாட்டு அரசுகளும் தனித் தொகையை ஒதுக்கி அதற்கான வேலைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்'' என்று உலக சுகாதார அமைப்பின் பொதுச் சுகாதாரத்துறைத் தலைவர் மரியா நெய்ரா தெரிவித்தார். (ம)

# சிரியாவில் கண்காணிப்பை அதிகப்படுத்தியது ரஷ்யா

டமஸ்கஸ், ஏப். 15
அமெரிக்காவின் தாக்குதலை அடுத்து சிரியாவில் தனது நடமாட்டத்தை ரஷ்யா இரட்டிப்பாக்கியது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
சிரியாவின் இட்லிப் மாகாணத்தில் உள்ள சேகுன் நகரில் சிரிய அரசுக்கு எதிர்த்துப் போராடும் ஆயுதக் குழுவுக்கு எதிராக கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்கிழமை வான்வழி இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டது. சிரிய அரசே இதை நடத்தியது என்று தெரிவித்த அமெரிக்கா பதிலடியாக சிரியாவின் முக்கிய இராணுவத் தளத்தைத் தாக்கியது. இது ஒரு வகையில் ரஷ்யாவுக்கு நடத்தப்பட்ட தாக்குதல் என்றே கருதப்படுகிறது. ஏனெனில் சிரிய அரசுக்கு தனது கடும் ஆதரவைத் தெரிவிக்கும் நாடுகளில் முக்கியமானது ரஷ்யா.
அமெரிக்காவின் அத்துமீறிய தாக்குதலை கடுமையாகக் கண்டித்த ரஷ்யா தற்போது சிரியாவில் தனது நடமாட்டத்தை மிகையாக அதிகரித்துள்ளது. குறிப்பாக அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கிளர்ச்சிக் குழுக்கள் ஊடுருவ முடியாதவாறு பாதுகாப்பு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. (ம)



# கத்தியால் உருவான 'தேவன்' சிலை



பிரிட்டனைச் சேர்ந்த பிரட் லி என்பவர், இரண்டு ஆண்டுகள் உழைப்பில் கத்திகளை மட்டுமே பயன்படுத்தி மிகப்பெரும் சிலையொன்றை உருவாக்கியுள்ளார். 24 அடி உயரத்தில் இருக்கும் இந்தச் சிலையில் ஒரு லட்சம் கத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
காவல் நிலையங்களால் குற்றவாளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட கத்திகள் இவை. ஆர். ஆர். "மார்டினின் கற்பனையில் உருவான தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஆயிரம் கத்திகளால் உருவாக்கப்பட்ட ஒரு சிம்மாசனம் இடம் பெறும். அதைப் பார்த்துதான் இந்தச் சிலையை உருவாக்கினேன்" என்று பிரட் லி தெரிவித்தார். இந்தச் சிலையை கத்தித்தேவன் என்று அவர் குறிப்பிடுகிறார்.
"குற்றங்கள் இப்போது அதிகம் நடக்கின்றன. கத்திக் குத்தில் ஏராளமான அப்பாவிகள் இறந்து போயிருக்கிறார்கள். அதனால் வன்முறைக்கு எதிரான பிரச்சாரமாக இந்தப் பணியை மேற்கொண்டேன். விடயம் அறிந்த பொதுமக்கள் தெருக்களில் கிடைத்த கத்திகளைக் கொடுத்தார்கள். கத்திக் குத்துகளால் உயிரிழந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், இந்தச் சிலையைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்து, விழிப்புணர்வு ஊட்ட வேண்டும் என்றும் தங்களைப் போல எவரும் அன்பானவர்களை இழந்து துயரப்படக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.
இனி இந்த கம்பீரமான கத்தி தேவன், கத்தியால் உயிரிழந்தவர்களின் வலிகளைச் சொல்லிக் கொண்டிருப்பான்" என பிரட் லி மேலும் குறிப்பிடுகிறார். (ம)





# வானில் இருந்து சடலங்கள்

மெக்சிக்கோவில் விமானத்தில் இருந்து மூவரின் சடலங்கள் விசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.
மெக்சிக்கோவின் சினாலாவா மாகாணத்தில் மூன்று பேரின் சடலங்கள் நேற்றுமுன்தினம் வானில் இருந்து விழுந்தது.
அங்கிருந்த மருத்துவமனை மாடியில் ஒருவரின் சடலம் விழுந்தது. இதையடுத்து, மேலும் இரண்டு சடலங்கள் அருகில் இருந்த வீட்டு வாசலில் விழுந்துள்ளன.
இந்தச் சடலங்கள் விமானத்தில் இருந்து வீசப்பட்டுள்ளதாக பன்னாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.
முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், வீசப்படுவதற்கு சில நிமிடங்கள் முன்னரேயே இவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் போதை மருந்து கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் என்றும் மெக்சிக்கோ பொலிஸார் தெரிவித்தனர். (ம)

## ...ருட வாழ்த்து ...நரேந்திர மோடி

தார். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் பலர் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகப் போராடி வருகின்றனர். பிரதமர் மோடி தம்மைச் சந்திக்க வேண்டும் என்பது அவர்களின் இறுதிக் கோரிக்கையாக உள்ளது. ஆனால் இந்த விவகாரத்தை மோடி கண்டும் காணாமலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



...அமைக்கும் பணிகள் கிட்டத்தட்ட ...ரியிட்டன. ட்ரம்ப், தனது தேர்தல் ...ாக வரும் போதைப் பொருள்களைக் ...மை குறிப்பிடத்தக்கது. (ம)



# வாணர் கலையரங்கம்

## தீவகத்துக்கொரு வரப்பிரசாதம்

■ பேராசிரியர் கா.குகபாலன்

புங்குடுதீவு வேலணை தாம்போதி கட்டுமானப் பணியை மேற்கொண்டு தீவுகளுக்கிடை யிலான கடற்போக்குவரத்தைத் தரைவழிப்பாதையாக மாற்றியமைக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டு அதனை நிறைவு செய்து தந்த பெருமைக்குரியவர்களான புங்குடுதீவு மண்ணின் மைந்தர்கள் அமரர்கள் க.அம்பலவாணர் (பெரியவாணர்) ச.அம்பலவாணர் (சின்னவாணர்) சகோதரர்களை நினைவுகூரும் வகையில் பிரமாண்டமாக நிறுவப்பட்ட கலையரங்கம் சித்திரைத் திங்கள் 15ஆம் திகதி மாண்புமிகு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்படுவதானது இந்தக் கிராமத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட தினமாகவே கொள்ள வேண்டும்.

1920 களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக 1937ஆம் ஆண்டு அப்போதைய ஆங்கிலேய அரசின் பிரதிநிதிகளால் தாம்போதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. வாணர் சகோதரர்கள் அரசப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற அமைப்புக்கள், தனிப்பட்டவர்கள் எனப் பலரது ஒத்துழைப்பைப் பெற்றே இந்த மாபெரும் பணியை மேற்கொண்டு 1953ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டது. இன்றைய நிலையில் தூர்ந்து போயுள்ள தரைவழிப்பாதைகளைப் புனரமைப்பதற்கு அரசு பல்வேறு இடர்பாடுகளைச் சந்திப்பதுடன் மக்கள் குறைவான இடங்களில் வீதி அபிவிருத்தி உட்பட அபிவிருத்திச் செயற்பாடுகளைப் பின்தள்ளும் நிலை காணப்பட்டு வருவதை தற்போது நடைமுறையில் காண்கின்றோம். இந்த நிலையில் 1953 ஆம் ஆண்டு புங்குடுதீவில் ஏறத்தாழ 9000 மக்கள் மட்டுமே வாழ்ந்திருந்த நிலையில் வாணர் சகோதரர்கள் வேலணை புங்குடுதீவு தாம்போதியை அமைத்துள்ளார்கள் என்றால் அவர்கள் எதிர்காலக் கண்ணோட்டத்துடன் செயற்பட்டதே காரணமாகும். அதாவது இந்தத் தரைவழிப் பாதை அமைக்கப்படாது விட்டிருந்தால் புங்குடுதீவு மக்கள் மட்டுமல்லாது நயினாதீவு, நெடுந்தீவு மக்கள் நெடுந்தூரக் கடற்பயணத்தை மேற்கொண்டே இன்றும் யாழ்ப்பாணத்தை அடைந்திருப்பர். இதனால் தீவுப்பகுதி மக்கள் சொல்லொணாத் துயரத்தில் இருந்திருப்பர். ஆனால் எம் மக்கள் இவர்களது சேவையை நினைவு கூறத்தவறுகின்றனர். இத்தகைய அருந்தொண்டாற்றிய வாணர் சகோதரர்களின் நினைவாக 1977ஆம் ஆண்டு பிரபல வர்த்தகரான கனகரத்தினம் என்பவரின் முயற்சியின் பயனாக வாணர் திறந்தவெளி அரங்கு ஒன்று கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. கடந்தகால அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாக அரங்கின் செயற்பாடுகள் செயலிழந்து போயிற்று. இந்த நிலையில் 2016 ஆம் ஆண்டு பெப்பரவரி மாதம் கனடாவில் பொன். சுந்தரலிங்கத்தின் தலைமையில் வாணர் கலையரங்கம் நிறுவுவது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அந்தக் கலந்துரயாடலில் யாழ்ப்பாணத்திலிருந்து பேராசிரியர் கா.குகபாலன் கலந்து கொண்டார். பல்வேறு வாதப்பிரதிவாதங்களைத் தொடர்ந்து வாணர் சகோதரர்கள் நினைவாக புங்குடுதீவு கிராமத்தில் கலையரங்கம் அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. கனடாவிலும் புங்குடுதீவிலும் அமைப்புக்குழுக்கள் உருவானது. கனடாவில் இன்னிசைவேந்தன் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் திருவாளர்கள் ச.சதாசிவம், சே.சந்திரலிங்கம் த. இரத்தினராசா, சி.கனகலிங்கம், ந. தர்மபாலன் சபாரத்தினம், நந்தகுமார், திருமி சத்தியவதி சங்கரலிங்கம் போன்ற பலர் கட்டடிப் பணிக் குழுவினராகச் செயற்பட்டனர். புங்குடுதீவில் கலைப்பெருமன்றம் சார்பில் தலைவர் சு.நித்தியானந்தன் மற்றும் திருமதி சுலோசனாம்பிகை தனபாலன், சி. திருலிங்கநாதன் போன்றோர் பேராசிரியர் கா.குகபாலன், ஆளுநரின் செயலாளர்இ.இளங்கோவனின் வழிகாட்டலுடன் கலையரங்கக் குழு அமைக்கப்பட்டு, செயற்பட்டு தற்போது கலை அரங்கம் திறந்து வைக்கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது.

வாணர் சகோதரர்களின் சேவையினை எதிர்கால சமூகத்தவர்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் இக்கலையரங்க வளாகத்தில் வாணர் சகோதரர்களுக்கு சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அமரர்களான அதிபர் சோ.சேனாதிராசா திவ்யநாயகி நினைவாக அவர்களது மகன் சே.சந்திரலிங்கம் அவர்களினால் கணினிக் கல்வி நிலையம், தையற் பயிற்சி நிலையம் மற்றும் விருந்தினர் விடுதியினை தமது சொந்த செலவில் அமைத்துத் தந்துள்ளார். கோபாலபிள்ளை மதிவாணனின் 24 பரப்புக்களைக் கொண்ட கலையரங்க வளாகத்தைச் சுற்று மதிலினை தமது சொந்த செலவிலேயே அமைத்துத் தந்துள்ளார்.

தற்போது நிறுவப்பட்டுள்ள வாணர் கலையரங்கமானது புங்குடுதீவுக் கிராமத்துக்கு மட்டுமல்லாது தீவகத்துக்கும் பொதுவான கலையரங்கமாகும். அதாவது இக்கலையரங்கம் தீவகத்தின் கலை, கலாசார, பாரம்பரியத்தை முன்னெடுக்கும் நிலையமாக செயற்படவுள்ளதுடன் குறிப்பாக கவின் கலை வளர்ச்சிக்கு பெரிதும் உதவவுமுள்ளது. அதுமட்டுமல்லாது மக்களின் அறிவுப் பசியைப் போக்க கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், தொடர் சொற்பொழிவுகள் கலை விழாக்கள், பரிசளிப்பு விழாக்களை நடத்துவதோடு நின்றுவிடாது பாடசாலை மாணவர்களின் கல்வியிலும் பெரிதும் அக்கறை கொள்வதற்கான செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்திச் செயற்பாட்டுடன் கூடிய கூட்டங்கள், செயலமர்வுகள் நடைபெறுவதற்கும் பயன்படுத்தக் கூடியதாகவிருக்கும் எனலாம். குறிப்பாக தீவகம் தெற்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளுக்கு இக்கலையரங்கத்தின் செயற்பாடுகள் என்றென்றும் உறுதுணையாக இருந்து வரும் என்பதை கலையரங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கலையரங்கச் செயற்பாடுகள் செவ்வனே நடைபெற சகலரதும் ஒத்துழைப்பையும் வேண்டிநிற்கின்றனர் கலையரங்கத்தினர். ■



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
நடத்தும்

# சித்திரைப் புதுவருடவிழா
## சுழிபுரம் 2017

"தேசியத்தின் சிறந்த இசைக் கலைஞர்கள்" பங்குகொள்ளும் "இன்னிசை இரவு"

காலம்: 15.04.2017 சனிக்கிழமை
இடம்: வழக்கம்பரை முத்துமாரி அம்மன் கோயிலடி, சுழிபுரம்.
நேரம் : பி.ப 3.00 மணி








### தமிழர் பாரம்பரிய கலைகளின் கண்காட்சி




### விளையாட்டு நிகழ்வுகள்

- போர்த் தேங்காய் அடித்தல்
- தாச்சிப் போட்டி (ஆண்,பெண்)
- கயிறு இழுத்தல் (ஆண், பெண்)
- தலையணைச் சண்டை
- கிறீஸ் மரம் ஏறுதல்
- தயிர்முட்டி உடைத்தல்
- சங்கீதக் கதிரை
- யானைக்கு கண் வைத்தல்
- முதியோர் நிகழ்வு (60 வயதுக்கு மேற்பட்டோர்)
- சிறுவர் நிகழ்வு (13 வயதுக்கு உட்பட்டோர்)

பங்குபற்ற விரும்புவோர் தொடர்புகளுக்கு
077 3400 950

பிரதான அனுசரணை
ICBT CAMPUS JAFFNA
021-4 777 889

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இனியாவது உண்மையை கொழும்பு ஒப்புக்கொள்ளட்டும்

போரில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட இராணுவம்போர்க் குற்றங்களைப் புரிந்தது என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, உலகில் ஒழுக்கமான இராணுவங்களில் ஒன்று இலங்கை இராணுவம்; அதன்மீது அபாண்டமாகப்பழிசுமத்துகிறார்கள் என்றார்கள்அப்போதைய கொழும்பு ஆட்சியாளர்கள். ஆட்சி மாற்றம்ஏற்பட்ட தன்பின்னர்தற்போதைய ஆட்சியாளர்களும் கூட, ஆங்காங்கே சிலர்தவறுகள் விட்டிருக்கலாம்; ஆனால் அதற்காக ஒட்டுமொத்த இராணுவத்தையும் குற்றஞ்சொல்ல முடியாது என்கிறார்கள். போதாததற்கு அத்தகைய இராணுவத் தினரை விசாரணைக்கு உட்படுத்துவதையோ, அவர்களைத்தண்டிப்பதையோ அனுமதிக்கமுடியாது என்கிறார்கள்.

இவர்கள்இப்படிச்சொல்லிக்கொண்டிருக்கும்போதேதான் ஹெய்ட்டியில் பாலியல் மீறல்களில், அதுவும் சிறுவர்பாலியல்துன்புறுத்தல்களில் இலங்கைப்படையினர்ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டு மீண்டும் எழுந்துள்ளது. உலகின் மிக ஒழுக்கமான இராணுவங்களில் ஒன்றைச் சேர்ந்தவர்கள் எப்படி சிறுவர் பாலியல் துன்புறுத்தல்களில் இறங்கினார்கள்? அப்படி இறங்கியவர்கள்தண்டிக்கப்படுவார்களா? முதுகெலும்புள்ள தலைவர்கள் பதிலளிக்கிறார்களா பார்ப்போம்? கரிபீயக் கடலில் உள்ள ஒரு தீவு ஹெய்ட்டி. இலங்கையை விடச்சிறிய நாடு. 27 ஆயிரத்து 750 சதுரக்கிலோமீற்றர்கள் தான்மொத்தப் பரப்புமே! சுமார் 1 கோடி மக்கள் வாழ்கிறார்கள். 1804 தை மாதம் முதலாம் திகதிதான் இறைமையுள்ள ஹெய்ட்டி நாடு உருவாகியது. முன்னர் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடு அது.

இராணுவப்புரட்சி, பின்னர்உள்நாட்டுக்கலவரங்கள்என்று ஹெய்ட்டியில் அமைதியின்மையே அதிகம். 2004 ஆம் ஆண்டு வடக்கு ஹெய்ட்டியில் ஆரம்பித்த புரட்சி, தலைநகரம் வரை விரிவானது. அப்போது அங்கு அரச தலைவராக இருந்தவரான அரிஸ்டைட் நாட்டைவிட்டுத் தப்பியோடினார். இந்தநிலைமையைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அமைதிப்படையினர்அங்குநிறுத்தப்பட்டனர், அமைதியைநிலைநாட்டுவதற்கென்று.

ஹெய்ட்டியில் ஐ.நா. அமைதிப் படையைச் சேர்ந்த 11,000 பேர்பணியாற்றுகிறார்கள். அவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் பாலியல் வன்முறை மற்றும் வன்புணர்வுக் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருப்பதாகச்சில நாள்களுக்குமுன்னர்ஐ.நா. ஏற்றுக்கொண்டுள்ளது. அதுபற்றியவிசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அது தெரிவித்தது.

பாலியல் முறைகேடுகள் குறித்த 85 முறைப்பாடுகள் உத்தியோகபூர்வமாக ஐ.நாவிடம் பதியப்பட்டுள்ளன. ஆனால் அந்த எண்ணிக்கை இன்னும் அதிகம் என்று சுயாதீனச் செய்திகள் கூறுகின்றன. 2008 முதல் 2015 வரையான 7 வருட காலத்திற்குள் பல்லாயிரக்கணக்கான இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று சுயாதீனச்செய்திகள்கூறுகின்றன. இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் பலர்சிறுமிகள். அவர்களில் பலர் இதனால் கர்ப்பமாகியிருக்கிறார்கள். அதனால்படிப்பையும்பாதியிலேயே விடவேண்டியவர்களாகி இருக்கிறார்கள். அப்பா இல்லாதவர்களாகப் பிறந்திருக்கும் இந்தப் பிள்ளைகளின் உரிமை என்ன? இதற்கு ஐ.நா தான் பொறுப்புக்கூற வேண்டும் என்று குரல் எழுப்புகிறார் இந்தப் பிரச்சினையைக் கையாண்டு வரும் மனித உரிமைகள் சட்டத்தரணியான மரியா ஜோசப்.

சிறுமிகளை இந்த நிலைக்கு ஆளாக்கினார்கள் என்று இலங்கைப்படையினர்130பேர்மீதும்குற்றச்சாட்டுச்சுமத்தப்பட்டுள்ளது. ஹெய்ட்டியில் அமைதிப் பணியில் ஈடுபடும் படையினருக்கு எதிராக உள்ளூர் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாது என்பதனால், இதுவரையில் எந்தவொரு படையினரும் தண்டிக்கப்படவில்லை. இலங்கைப் படையினரும் அதற்குள் அடக்கம்.

எனவே, இனியாவது இலங்கைப் படையினர் புனிதர்கள் இல்லை, குற்றம் புரியக்கூடியவர்கள்தான் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்கள்மீதானபோர்க்குற்ற மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைவிசாரிக்க பன்னாட்டு விசாரணை ஒன்றுக்குத்தயக்கமின்றி கொழும்பு அரசு முன்வரவேண்டும். பாதிக்கப்பட்ட அனைத்துத்தரப்பினருக்கும் நீதி வேண்டும்.



கட்டுரை



# அரசபடையினர் அப்பாவிகளா?

விவேகானந்தனூர் சதீஸ்

இறைமை உள்ள ஒரு நாட்டுக்கு அந்தநாட்டுஇராணுவத்தின் பங்கும்பயனும்மிக மிக அத்தியாவசியம் என்பது அனைவரும் அறிந்ததொன்று. எனினும் குறித்த இராணுவத்தின் அனைத்துக் கட்டமைப்புக்களும் அரசியலுக்கு அப்பால் கட்டுறுதி குலையாது தத்தமது கடமையைச்செவ்வனேசெய்ய வேண்டும்.

அத்தகைய நிலையிலேயே அவர்கள் நாட்டு மக்கள் மத்தியில் தேசிய வீரர்களாக மதிக்கப்படுவார்கள். பல்லினச் சமூகங்கள் வாழும் ஒரு நாட்டில் குறித்த ஒரு சமூகத்தின் நலனை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படக் கூடிய படைக் கட்டமைப்பை அல்லது பாதுகாப்புத் தரப்பை எவ்வாறு தேசப்பற்று உள்ளவர்கள் என்றோ அல்லது தேசிய வீரர்கள் என்றோ கொள்ள முடியும்? இது எமது இலங்கை மண்ணில் அன்று தொட்டு வாழ்ந்து வரும் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் எழும் பெரும் சந்தேகம்.

### இனங்களுக்கிடையே உருவான துரோதமே போருக்குக் காரணம்

இலங்கைத்தீவில்ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில் கால் பதித்த இனங்களுக்கிடையிலான பெரும்பான்மை, சிறுபான்மை என்றபெரும்போட்டிபெற்றெடுத்ததே மூன்றரைத் தசாப்த கால ஆயுதப்போராகும். இதன் இரு துருவங்களாகஅரசபடைகளும் விடுதலைப்புலிகளும் போரில் ஈடுபட்டனர். இரண்டு தரப்பினருடனும் இரு வேறு இனச்சமூகங்கள் சார்ந்திருந்ததால் சமரசங்கள்மேற்கொள்ளவேண்டிய தேவை தவிர்க்கவியலாது போனது. எனினும்பெரும்பான்மையினரின் இதய சுத்தியற்ற கொள்கைகளால் பேச்சு மேசைகள் சுவாசமற்றுப் போயின. அதனைச் சாதகமாக்கிக் கொண்ட அரச தலைமை, பன்னாட்டுச் சக்திகளின்பக்கபலத்துடன் போரை முன்னெடுத்துத் தமிழ் இனத்தை ஒடுக்கி, வெற்றியும் கண்டது. இங்குதான் இறைமை உள்ள இலங்கைத் தேசத்தின் பௌத்த வழி வந்த இராணுவப்படைகள்தமது அநாகரிகமான போர்த் தர்மத்தை வெளிக்காட்டி உள்ளனர். இனம் சார்ந்த போரைக் கட்டவிழ்த்துவிட்டு, மனிதாபிமானப் போர் நடத்தியதாக வாதிடும் இலங்கைப்படைத்தரப்பின்மீது அதே பன்னாட்டுத் தரப்புக்கள் இன்று போர்க்குற்றங்களைப் புட்டுவைக்கின்றன. அன்றைய சமரசத்தின் பங்காளிகளாக இருந்த தமிழர், இன்றைய அரங்கேற்றத்தில் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருக்கிறார்கள். இலங்கைஅரச படைகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை வலியுறுத்தி வருகிறது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப்பேரவை. அதன்2017 ஆம் ஆண்டுக்கான தீர்மான நிறைவேற்றத்தின் இறுதிக் காலப்பகுதியில் இக்கட்டுரை எழுதும்படியாகிறது.

### தடுமாறும், தடம்மாறும் பாதிக்கப்பட்ட மற்றும் பாதுகாக்கப்பட்ட தரப்புக்கள்

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் பாதிப்பை ஏற்படுத்திய தரப்பினரும், பாதுகாக்கப்பட்ட தரப்பினரும் தத்தமது அணிகளுக்குள்ளேயே தடுமாறிக் கொண்டும், தடம்மாறிக்கொண்டும் இருக்கின்றனர். 2015இல் கொண்டு வரப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்தை இணை அனுசரணையுடன் ஏற்றுக் கொண்ட இலங்கை அரசு தற்போது நாப்புரள்வுக்குஉட்பட்டுள்ளது. அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் உட்பட ஆளும் தரப்பினர் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வருகின்றனர். அதாவதுஎந்தச்சூழ்நிலையிலும் பொறுப்புக் கூறல் என்ற விடயத்துக்குக் கலப்பு நீதிமன்றமோ அல்லது பன்னாட்டு விசாரணையோஏற்படுத்தப்படமாட்டாது என்றும், நாட்டைக் காத்த இராணுவத்துக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தயாரிக்கவோ, தண்டனை வழங்கவோ இடமளிக்கப் போவதில்லை எனவும் சூழுரைத்துவருகின்றனர். சர்வதேசத்தை ஏமாற்றினாலும் ஏமாற்றுவோமே தவிர, எமது இராணுவத்தைக் காட்டிக்கொடுக்கப் போவதில்லை என்று கூச்சலிடு பவர்களா நல்லாட்சி நாயகர்கள்? சிறுபான்மை இனத்தவர்களைச் சிதைத்தேனும், அவர்களது உரிமைப் போராட்டத்தை நசுக்கிய தேச பிதாக்களின்தியாகத்தைமதிக்கிறார்களா? இல்லை மறைக்கிறார்களா?என்றுபுரியவில்லை. இந்த வேளையில் இலங்கைப் பாதுகாப்பு தரப்பினரின் சுய ஒழுக்கம் பற்றியும், பணி ஒழுக்கம் பற்றியும் ஒரு சில விடயங்களைப் பார்த்தாக வேண்டும். இறுதிப்போருக்கு முந்திய காலம், இறுதிப்போர்க்காலம், இறுதிப்போருக்குப் பிந்திய காலம்என மூன்று காலத்திலும் முப்படை சார்ந்தவர்கள், புலனாய்வு தரப்பினர், மற்றும் பொலி ஸார் எனப்படுவோர் தமது அடக்குமுறை எண்ணக்கருவை முன்னிறுத்தி மேற்கொண்ட குற்றமிழைப்புக்கள் ஏராளம். மனம்பேரி என்ற சிங்கள யுவதிக்கு இழைத்த கொடுமையில் தொடங்கி, செம்மணியில் கிருசாந்தி, வேலணையில் சாரதாம்பாள், மன்னாரில் கமலிதா, அம்பாறையில் கோணேஸ்வரி, முள்ளிவாய்க்காலில் இசைபிரியாக்கள் என தொடரும்வன்கொலைகளுக்கு இலங்கை இராணுவத்தினரே காரண கர்த்தாக்கள். இதை விட இறுதிப்போருக்கு முந்திய காலத்தில்பலபத்துக்கூட்டுப்படுகொலைகளைப் புரிந்த பெருமையும் கூட அவர்களையே சாரும். இவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே தவிர்க்க முடியாத தற்காலிகத் தண்டனைகள் அளிக்கப்பட்

டன. பின்னர் அவர்களும் மேன்முறையீட்டில் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். ஏனைய அனைவரும் அதிகார வர்க்க ஆதரவால் காப்பாற்றப்பட்டார்கள். காப்பாற்றப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

**பட்டியலிடப்படும் படையினரது போர்க்குற்றங்கள்**

2009 ஆம் ஆண்டில் இறுதிப்போரின் போது மனித குலத்துக்கு எதிரான பல குற்றங்களைஇராணுவத்தினர்செய்திருந்தனர். அதற்கான ஆதாரங்களை காணொலிகளாகஅவர்களேசிலருக்கு விநியோகித்திருக்கின்றனர். அவற்றின் ஆதாரத் தொகுப்பே சனல்-4 காணொலி வெளியீடு கள். ஒரு ஜனநாயக அரசின் அறைகூவலைச் செவியேற்றுச் சரணடைந்த அதே நாட்டுப் பிரஜைகளை, அதாவது போராளிகளை நிர்வாணப்படுத்தி வகை தொகையின்றி வன்கொடுமைக்கு ஆளாக்கியது அரசபடை. பெண்போராளிகள் பலர் பாலியல் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுஉயிர்பறிக்கப்பட்டார்கள். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த தலைமைப்போராளிகளை சித்திரவதைப்படுத்திக்கொலை செய்ததும், இலங்கை புனிதப் படையின் கொள்கைகளில்ஒன்றுதான். முப்படைகளது உளவுத்துறையினரால் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டார்கள், யாழ் மாவட்டத்தின் பலாலிப் பகுதி மற்றும் வரணிப்பகுதியில் இராணுவம் கையகப்படுத்தி வைத்திருந்த மக்களுடைய சில வீடுகள் சித்திரவதைக் கூடங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்த தகவல் அண்மையில் பரகசியமானது. அவைதவிர. முல்லைத்தீவில் கோட்டா முகாம், திருகோணமலை நிலத்தடி வதை கூடமான கண்சைட் முகாம், கொழும்பு சைட்டம் வீதியில் கிட்டுபம்பு முகாம் போன்றவை இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் வெள்ளை வானில் கடத்தப்படுபவர்களை மறைத்து வைக்கும் வதை மையங்களாகச் செயற்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. வவுனியா மன்னார், மட்டக்களப்புதிருகோணமலை, மற்றும் கொழும்பை அண்டிய பிர தேசங்களில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டவர்கள் சித்திரவதையின் பின்னர் கண்ட துண்டமாக வெட்டப்பட்டு களனி கங்கையில் போடப்பட்டதாக புலனாய்வு தரப்பினரால் நீதிமன்றில் சாட்சிகள் மூலம் உறுதி செய்யப்பட்டிருந்தன. இவ்வாறான குற்றங்களைப் புரிவதற்குக் கட்டளை ரீதியாக அல்லது ஆலோ சனை ரீதியாக செயற்பட்டவர்களைநல்லாட்சிஅரசும்கூடபாதுகாத்து வருவதாக, பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர்.

**போர்க்குற்றங்களுக்கான பொறுப்பை மற்றவர் மீது சுமத்தும் உத்தி**

நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டஇத்தகையசெயற்பாடுகளுக்கான பொறுப்பை வெறுமனே பாதுகாப்பு தரப்பின்அடிமட்டசிப்பாய்கள்மீதுசுமத்திவிட்டுக் கட்டளையிட்டோர் இலேசில் தப்பிவிட முடியாது.பல சம்பவங்களுடன் இராணுவத்தின் கேணல், மேஜர், கப்டன், கோப்ரல் தர அதிகாரிகள் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார்கள். இவற்றைத் தவிர ஒப்பந்தக் கடத்தல்களில், கொலைகுற்றங்களில், ஈடுபட்டதாக கடந்த ஆட்சியின் அரச தலைவர் பாதுகாப்புபிரிவினரும்உயர்பொலிஸ் அதிகாரிகளும் கூடக் கைதாகி வருகிறார்கள். இது தண்டனை வரை தாக்குப் பிடிக்குமா என்பது வேறு விடயம். குற்றவாளிகள்எவராகஇருந்தாலும்சட்டத்தின் முன் தண்டிக்கப்பட வேண்டும். இல்லையேல் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பதால்தான் கண்டும் காணாமல் விடப்படுகிறார்களா என்ற அவப்பெயரை நல்லாட்சி அரசும் சந்திக்க நேரிடலாம்.

அண்மைக் காலங்களில் நாட்டின் நாலாபுறமும்பாதாளஉலகக்கும்பல்களின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது. இத்தகைய கும்பல்களின்தலைவர்கள்எனத்தம்மைக் கூறிக் கொள்பவர்களும் சரி, அவர்களின் கைக்கூலிகளும்சரி இதில் அனேகமானவர்கள் முன்னாள் இராணுவப் படையை சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பெயர்களுக்கு முன்னால் தாம் முன்னர் இராணுவத்தில் வகித்த துறைப்பெயர்களை அவர்களின் அடை மொழியாகப் பயன்படுத்தியே பிரபலமடைந்துள்ளார்கள். பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ள பாதாளக் குழுக்களைச் சேர்ந்தவர்களிடம் கதை கொடுக்கும் போது தங்களது வீர தீரச் செயல்களை அளந்து கொட்டுகிறார்கள். தமது பிரதானசெயற்பாடுகளாககப்பம்பெறுதல், போதைப்பொருள் விற்பனை, ஒப்பந்த கொலைகொள்ளை, மிரட்டல்கடத்தல் என்பவற்றைக் குறிப்பிடுகிறார்கள். மேலும் தமக்குத் துப்பாக்கி, கைக் குண்டு, இராணுவச்சீருடைஎன்பவை தேவைப்படின் படைவிட்டோடிகளிடம் இருந்து பணம் கொடுத்துப் பெறுவதாகத் தெரிவிக்கின்றனர். இன்று சிறைகளில் இருக்கின்ற கைதிகளில் மூன்றில் ஒருபகுதியினர்இராணுவப்பின்னணி கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

எனவே இத்தகைய இராணுவப் படைகள்குற்றம்செய்திருக்கவேமாட்டார்கள் என்று கண்ணை மூடிக்கொண்டு கூப்பாடு போடுபவர்களை எந்த வகையில் கணிப்பது? இவர்கள்தான்போர்ஓய்ந்த வடக்குப் பூமியில் படையெடுத்து நிற்கிறார்கள். தமிழ் மக்கள் காணிகளிலும் வாழ்விடங்களிலும் மேலாதிக்க எண்ணத்துடன் நிலைத்திருக்கும் இராணுவத்தினர் மக்களது சாத்வீகப் போராட்டங்களுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் மாற்றிடம் நாடிப் போகையில் மக்களின் சொந்த வீடுகளைத் தரைமட்டமாகஇடித்துஅழித்துவிட்டுப் போகின்றனர். இதனை, அவர்கள் எந்தளவுக்கு தமிழ் மக்கள் மீது வெறுப்புணர்வு கொண்டுள்ளார்கள் என்பதற்கான உதாரணமாகக் கொள்ள முடியும். இவ்வாறான குணம் குறியும் சினமும் கொண்ட இராணுவத்தினர் தான் தற்போதும் கூட வடக்கு மண்ணில் இருந்து மனிதாபிமானப் பணி செய்கிறார்கள் என்று அரசு கூறி வருகிறதா? நடுநிலை, கருத்தூக்கம் மிக்க மனிதர்களே, நீங்கள் சொல்லுங்கள்; வடக்கில் வாழும் 4 பொது மக்களுக்கு ஒரு இராணுவம் என்ற விகிதாசாரம் நியாயமானதா? இலங்கையில் வேறெந்தச் சிங்களப் பிரதேசத்திலாவது இவ்வாறு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதா? எந்தச் சிங்கள மக்களினதும் பல்லாயிரம் ஏக்கர் சொந்த காணிகளை அபகரித்து ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறதா? தமது பாரம்பரிய வாழ் நிலத்தைக் கோரியும், ஜனநாயகஅரசொன்றினால்திட்டமிட்டுகாணமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடியும்எந்தவொருசிங்களப்பொதுமகனும்மாதக்கணக்கில்வீதிவழிநின்று போராடி இருக்கிறார்களா? அல்லது அப்படிச் செய்யவிட்டு அரசுதான் வேடிக்கை பார்க்குமா? இப்போது சொல்லுங்கள்?

ஏன்இந்தஎதிர்ப்பரிணாமம். இதுதொடருமெனில், எப்படி எம்மண்ணில் நல்லிணக்கமும்ச மாதானமும், சகவாழ்வும்சாத்தியப்படும்?



வாழ்விடங்களிலும் மேலாதிக்க எண்ணத்துடன் நிலைத்திருக்கும் இராணுவத்தினர் மக்களது சாத்வீகப் போராட்டங்களுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் மாற்றிடம் நாடிப் போகையில், மக்களின் சொந்த வீடுகளைத் தரை மட்டமாக இடித்து அழித்து விட்டுப் போகின்றனர். இதனை, அவர்கள் எந்தளவுக்கு தமிழ் மக்கள் மீது வெறுப்புணர்வு கொண்டுள்ளார்கள் என்பதற்கான உதாரணமாகக் கொள்ள முடியும். இவ்வாறான குணம் குறியும், சினமும் கொண்ட இராணுவத்தினர் தான் தற்போதும் கூட வடக்கு மண்ணில் இருந்து மனி தாபிமானப் பணி செய்கிறார்கள் என்று அரசு கூறி வருகிறதா? நடுநிலை, கருத்தூக்கம் மிக்க மனிதர்களே, நீங்கள் சொல்லுங்கள்; வடக்கில் வாழும் 4 பொது மக்களுக்கு ஒரு இராணுவம் என்ற விகிதாசாரம் நியாயமானதா?



# வாசகர் திருமுகம்

## ஊழியர் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும்

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் தமது பணி தொடர்பாகத் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முதலில் சாதகமாக சாத்வீக வழிமுறைகளில் குறிப்பாகத் தமது பிரச்சினைகள் தொடர்பாக உரிய நிர்வாகங்களுடன் பேச்சுக்கள் மேற்கொள்வதனூடாகவே பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்கின்றனர். அத்தகைய பேச்சுக்களில் விட்டுக் கொடுப்புக்கள் மூலம் இணக்கநிலையொன்று எட்டப்படாத நிலையிலேயே, மாற்றுவழி ஏதுமின்றி பணிப்புறக்கணிப்புப் போன்ற தொழிற்சங்கப் போராட்டங்களில் குதிக்க முயல்கின்றனர்.

அத்தகையதொரு நிலையில் சம்பந்தப்படும் இருதரப்புக்கள் மட்டுமன்றி, மூன்றாம் தரப்பான பாவனையாளர் தரப்பும் பாதிக்கப்பட நேர்கிறது. ஆயினும் இது விடயத்தில் ஊழியர் தரப்புக்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட நிர்வாகத்தரப்புக்கள் தத்தமது இறுக்கமான நிலைப்பாட்டில் விட்டுக் கொடுப்பை மேற்கொள்ள முன்வந்தால் மட்டுமே, பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வை எட்ட இயலும்.

அந்த வகையில் அண்மையில் குறிப்பிட்ட சில கோரிக்கைகளின் அடிப்படையில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தமொன்றில் ஈடுபட்ட மின்சார ஊழியர்களைப் பழிவாங்கும் விதத்தில் நிர்வாகத் தரப்பினர் நடந்து கொள்வதாக மின்சாரசபை இணைந்த தொழிற்சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. தொழிற்துறைசார் தமது உரிமைகளைப் பயன்படுத்த முனைந்த ஊழியர்களைப் பழிவாங்கும் நோக்கில் நிர்வாகம் செயற்பட முனைந்தால் இருதரப்புக்கள் மத்தியிலான சுமுக உறவு அந்நியோன்யம் மேன்மேலும் விரிசலடையுமேயன்றி பிரச்சினை தீர்க்கப்படப்போவதில்லை. எனவே ஊழியர்களது கோரிக்கைகள் நியாயமானவையாக இருக்குமானால், அவை குறித்துச் சாதகமாகப் பரிசீலித்து உரிய தீர்வு காணப்படுவதே உகந்ததொன்றாகும். ஏனெனில் இன்றைய நிலையில் மின்சார வசதி நாட்டு மக்களின் பெரும்பாலோருக்கு மிக அத்தியாவசியமானதொன்றாகும் என்பதால் பிரச்சினைகள் பேச்சுக்கள் மூலம் சுமுகமாகத் தீர்க்கப்படுதலே பொருத்தமானதாகும்.

*அ. அரியரட்ணம்*
*அரியாலை*

**காணி விற்பனைக்கு**

உரும்பிராய், கோப்பாய் வீதியின் மத்தியில் 2 km தூரத்திலும் பாரதி கடைக்கு முன்பாக 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 697 2287

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச்சேர்ந்த 1981 மிருகசீரிடம், 3 ஆம் கால், 10 இல் சூரியன், செவ்வாய் பாவம் 20 உடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். **தொடர்புகளுக்கு**

**021 221 6201**

**Beacon Tutory**

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

**BIOLOGY**
18.04.2017 செவ்வாய் ஆரம்பம்
1.30 PM தாழ்வகை தாவரங்கள்
**உயிரியல் தொழில்நுட்பம்**
4.30 PM மா மூலக்கூறுகள்
**NB: BIO CENTRE இல் 3 PM**
**G.C.E. (A/L) 2019**
**தொடர்பு : 077 665 5290**
மூத்த ஆசான் நரேந்திரன்

# மானிப்பாயில் வீடு புகுந்த கும்பலால் கத்தி முனையில் இளம்பெண் கடத்தல்

## பொலிஸாரிடம் தாயார் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 15

மானிப்பாய் பொன்னாலை வீதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வீடு புகுந்த இனம்தெரியாத குழுவினர் கத்தி முனையில் 19 வயது இளம் பெண்ணைக் கடத்திச் சென்றனர் என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பெண்ணின் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

"மானிப்பாய், பொன்னாலை வீதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் நேற்றுமுன் தினமிரவு 9 மணியளவில் கார் மற்றும் 3 மோட்டார் சைக்கிள்களில் சென்ற கும்பல் ஒன்று முகத்தை துணியால் கட்டியவாறு நுழைந்தது.

கும்பலில் சிலர் கத்திகளுடன் வருவதைக் கண்டு வீட்டிலிருந்தோர் கூக்குரல் எழுப்பினர். அவர்களை வெட்டிவிடுவதாக கும்பல் அச்சுறுத்தியது. இதனால் அங்கிருந்தவர்கள் தப்பி வெளியில் செல்ல முயன்றுள்ளனர். எனினும் கும்பலால் அவர்கள் தடுக்கப்பட்டனர்.

குறித்த நேரம் வீட்டில் நின்ற 19 வயது இளம் பெண் தப்பியோட முயன்றுள்ளார். அவரை விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்து காரில் கும்பல் கடத்திச் சென்றது. இவ்வாறு இடம்பெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பில் உடனடியாக தொலைபேசி மூலம் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது" என்று கடத்தப்பட்ட பெண்ணின் தாயார் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

"தாயாரின் முறைப்பாட்டில் இனம் தெரியாத சிலரே வீடு புகுந்து மகளை கடத்திச் சென்றனர் என்றும் தற்போதுவரை மகளை கடத்தியதும் யார் எனத் தெரியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-101)

கணித, விஞ்ஞான பாடங்களுக்கான

# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 456 விண்ணப்பங்கள் வந்தன

## வடக்குக் கல்விச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15

வடக்கு மாகாணத்தில் உள்ள கணித, விஞ்ஞான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 456 விண்ணப்பங்கள் கிடைத்துள்ள தாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:


வடக்கு மாகாணத்தில் தற்போது கணித, விஞ்ஞான பாடங்களுக்கான 308 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக மத்திய அரசின் அனுமதியுடன் வடக்கு மாகாணத்தில் உள்ள குறித்த துறைசார் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுத்தோம்.

இதன்படி குறித்த பதவிகளுக்காக 456 பேர் மட்டுமே விண்ணப்பித் துள்ளனர். இவ்வாறு விண்ணப் பித்தவர்களில் இருந்து எமது மாகாணத்துக்குத் தேவையான 308 ஆசிரியர்களை நியமிக்க எண்ணியுள்ளோம். தற்போது கிடைத்துள்ள விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

308 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்க முடியும் என்பதால் 456 பேரில் இருந்து 308 பேரை மட்டும் தேர்வு செய்கின்ற பொருத்தமான வழி முறைகள் தொடர்பில் ஆராயப்படுகின்றது. அவ்வாறு கண்டறியப்படும் வழிமுறைகள் தொடர்பில் நியமனத்தின் முன்னர் அறியத்தரப்படும் - என்றார். (த-101)

## மரண அறிவித்தல்

# சுப்பிரமணியம் (சுப்பர்) சின்னமணி



துவாளி வீதி, இமையாணன், உடுப்பிட்டி (கிளாப்பத்தையை) பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் (சுப்பர்) சின்னமணி 13.04.2017 வியாழக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் ஞானவதியின் அன்புக் கணவரும் வளர்மதி, காலஞ்சென்ற இந்துமதி மற்றும் சந்திரமதி (சாந்தி), காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் சேதுபதி, தேன்மொழி(சுமதி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்தாச்சி, பொன்னம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புத் தம்பியும் காலஞ்சென்ற செல்லத்துரை, தங்கம்மா ஆகியோரின் அன்புத் தமையனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2017) சனிக் கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொகுவல மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொகுவல இந்து மயானத்திற்கு பி.ப. 4.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**உடுப்பிட்டி.**

# கிளைமோர் குண்டு பூம்புகாரில் மீட்பு



யாழ்ப்பாணம், ஏப்.15

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதியில் வெடிக்காத நிலையில் இருந்த கிளைமோர் குண்டு ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பூம்புகார் கடற்கரையை அண்டிய பகுதியில் காணப்பட்ட குறித்த கிளைமோர் தொடர்பாக பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-21,106)

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## காணி...

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது முகாம்களில் வசிக்கும் மக்களில் சொந்தக் கிராமத்திலும் சொந்தக் காணி இல்லாதவர்களில் காணியைக் கொள்வனவு செய்து குடியேற விரும்பு வோருக்கு 2 பரப்புக் காணிக்குரிய பணத்தை மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக யாழ். மாவட்டச் செயலகம் வழங்கி வருகின்றது.

இந்தத் திட்டத்தில் வழங்கப்படும் காணிக்காக பரப்பு ஒன்றுக்கு அதிக பட்சம் 2 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் மொத்தம் 4 லட்சத்துக்கு மேற்படாத தொகை வழங்கப்படுகின்றது. இவ்வாறு காணியைப் பெற்று அதில் நிரந்தரமாக குடியேற விரும்புவோர் பிரதேச செயலகம் ஊடாக மாவட்டச் செயலகத்தில் பதிவை மேற்கொண்டு தமக்கான காணியைத் தேர்வு செய்து மாவட்டச் செயலகத்துக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

பயனாளி நேரடியாகத் தேர்வு செய்த காணியை மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் பார்வையிட்டு பெறுமதியை மதிப்பீடு செய்வார்கள். அந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கான பணமே வழங்கப்படும். அந்தத் தொகை 4 லட்சத்துக்கு மேற்படாததாக இருக்க வேண்டும்.

இந்தத் திட்டத்தில் காணியைப் பெறுவதற்கு 114 பேர் முகாமில் இருந்து வெளியேறி நிரந்தரமாகக் குடியமர சம்மதம் தெரிவித்து பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். அவர்களில் பலர் காணிகளை இனம்கண்டு மாவட்டச் செயலகத்துக்கு தெரியப்படுத்தியுள்ளனர். 6 குடும்பங்கள் காணிகளைப் பெற்று அவர்களுக்குரிய உறுதிகளும் கைமாற்றி வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(வ-101)

## கனடா...

கடவுள் வழிகாட்டுவார்"

இவ்வாறு கனடா தலைமை அமைச்சர் ஜஸ்டின் ட்ருடேவின் தமிழ் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கனடா தலைமை அமைச்சரின் அதிகாரபூர்வ இணையதளத்தில் அவர் இதனை வெளியிட்டுள்ளார்.

"கனடா கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 150 ஆண்டுகள் முடிவடையும் நிலையில், பல்வேறு இன, மத மக்கள் வாழ்கின்ற சிறப்பான நாடாக கனடா உள்ளது. இந்த நிலையை ஏற்படுத்தியதில் தமிழர்களின் பங்கு மிகப்பெரியது. அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அமைதியான, மகிழ்ச்சியான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டை கொண்டாட கனடா அரசின் சார்பாக தமிழர்களுக்கு வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்" என்று தனது வாழ்த்தில் ஜஸ்டின் ட்ருடே தெரிவித்துள்ளார்.

(வ-5)

## மரண அறிவித்தல்

# திருமதி பராசக்தி நடேசன்



மட்டுவில் தெற்கு, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, வாகையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி நடேசன் 13.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடேசனின் (முன்னாள் ஊழியர் - கைதடி ஆயுள்வேத வைத்திய சாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவசம்பு காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் மௌலீசன்(கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை), சுகாஜினி (ஜேர்மன்), கௌசிகன் (எலைன்ஸ் நிதி நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தாயும் நிஷாதினி (யாழ். பல்கலைக் கழகம்), கஜேந்திரன் (ஜேர்மன்), சுகந்தினி (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும் நிருஜன், நிலாஜன், சுபேதனன், நிக்ஷிகா, கிவோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விஸ்வலிங்கம் காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லையா, செல்வராசா மற்றும் பவளம்மா, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கணேசன் மற்றும் திலகவதி, மகேசன், விமலாவதி, சிவனேசன், பத்மாவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும்**
**சிறப்பு இசையரங்கும்**
**கலைஞர் ஒன்று கூடலும்**

காலம் - 17.04.2017 திங்கள் மாலை 5 மணி
இடம் - நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்

**நிகழ்ச்சிகள்**

மாலை 5 மணிக்கு - ஈழத்தின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்கள் இணைந்து வழங்கும் சிறப்புத்தவில், நாதஸ்வர கச்சேரி

**6 மணிக்கு சிறப்பு இன்னிசையரங்கம்**

**பாட்டு - இன்னிசை வேந்தர் திரு. பொன் சுந்தரலிங்கம்**
**வயலின் - திரு. அ. ஜெயராமன்**
**மிருதங்கம் - நல்லை க. கண்ணதாஸ்**
**கெஞ்சிரா - திரு. ஞா. வசந்**
**முகர்சிங் - திரு. ந. சதீஸ்குமார்**

குறிப்பு - அன்று மாலை 4.30 மணியளவில் இளங்கலைஞர் மன்ற நிறுவுனர் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்து மூத்த இளைய கலைஞர்களை சந்தித்து உரையாடவுள்ளார். எனவே இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அனைத்துக் கலைஞர்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**செயலாளர்,**
**இளங்கலைஞர்மன்றம்.**

## இலங்கை...

நடவடிக்கையும் எடுக்கப்படாமல் பாதுகாப்பாகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஹெய்ட்டியில் ஐ.நா.வினால் அமைதி காப்புப் பணிக்காக அமர்த்தப்பட்ட 900 பேர் கொண்ட இராணுவ பற்றாலியனைச் சேர்ந்தவர்களில் 134 பேர் மீதே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய 114 படையினர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 2004 ஆம் ஆண்டில் இருந்து கடந்த 12 ஆண்டுகளில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றிய இலங்கைப் படையினர், மீது 2000 பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக' ஏ.எப்.பி. செய்திச் சேவை தெரிவித்திருந்தது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா.வுக்கான அமெரிக்க பிரதிநிதி நிக்கி ஹாலே, ஐ.நா. அமைதி காப்புப் பணிக்குப் படையினரை வழங்கியுள்ள எல்லா நாடுகளும், தமது படையினரின் பாலியல் துர்நடத்தை மற்றும் சுரண்டலுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். தமது படையினரைப் பொறுப்புக்கூற வைக்க மறுக்கும் நாடுகளின் பங்களிப்பை நிறுத்தவேண்டும். அவர்களின் படையினரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அவர்களுக்கான நிதி இழப்பீடுகளும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். இந்தக் குழந்தைகளுக்கு நாம் எதைச் சொல்ல முடியும்? இந்த அமைதி காப்பாளர்கள் அவர்களைப் பாதுகாத்தனரா? ஹெய்ட்டியில் ஐ.நா. அமைதிப்படைக்குப் பங்களிப்புச் செய்த நாடுகள், தமது படையினரைப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்று நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம். மற்ற நாடுகளும் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பிய படையினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் ரொசான் செனவிரட்ன தெரிவித்தார்.

(த-5)

## வெசாக்...

இவ்வாறு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நேற்று வலியுறுத்தினர் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள்.

சித்திரைப் புதுவருட தினமான நேற்று யாழ்ப்பாண சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா நேரில் சென்று பார்வையிட்டார். அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்போதே அரசியல் கைதிகள் இவ்வாறு கோரினர் என்று தெரிவிக்கப்பட்டது.

"சிறப்புத் தினங்களின்போது அரச தலைவரால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு கைதிகள் விடுவிக்கப்படுவார்கள். அவ்வாறு எம்மையும் விடுவிக்க நடவ்டிக்கை எடுக்க வேண்டும். உலக வெசாக் தினம் இலங்கையில் இந்த ஆண்டு கொண்டாடப்படுவதால், அதனை முன்னிட்டாவது எங்களைப் பொதுமன்னிப்பில் விடுவிக்க அரச தலைவருக்குக் கடும் அழுத்தம் கொடுங்கள்" என்று கைதிகள் நாடாளு மன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவிடம் கோரினர்.

கைதிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, அரச தலைவருடன் இது தொடர்பில் பேச்சு நடத்துவதாகக் குறிப்பிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

"நாங்கள் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. அதனால் எங்களை மறுவாழ்வுக்கு உட்படுத்தவாவது நடவடிக்கை எடுங்கள். அது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடனும் பேசி நடவடிக்கையைத் துரிதப்படுத்துங்கள்" - என்று அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் கோரினர்.

இந்த விடயம் தொடர்பில் தலைவர் சம்பந்தன் ஊடாக அரசுக்குக் கொண்டு செல்லப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-4, 5, 101)

## வடக்கில்...

கடந்த கால புதுவருடப் பிறப்பானது யாழ்ப்பாண நகர்ப் புற கடைகளில் ஆடைகள் வாங்குவதற்கு மக்கள் கூட்டம் நிறைத்திருந்தது. வாகனம் நிறுத்துவதற்கு கூட இடம் இல்லாமல் நெரிசல் காணப்பட்டது. ஆனால் இந்த முறை வியாபாரம் பெரியளவில் களைகட்டவில்லையென வியாபாரிகள் தெரிவித்தனர். புதுவருடப் பிறப்புக்கு முதல் நாள் பட்டாசு மற்றும் வெடிச்சத்தம் பெரிதாக கேட்கவில்லை. யாழ்ப்பாணத்தின் முதன்மை வீதிகளில் உயர்ரக பட்டாசுகள் விற்பனைக்காக குவிக்கப்பட்டன. எனினும் மக்கள் அதில் பெரிதாக நாட்டம் காட்டவில்லை எனப் பட்டாசு வியாபாரிகள் தெரிவித்தனர். அதிகாலை வேளை புதுவருடம் பிறக்கின்றது என்பது பட்டாசு வெடிச் சத்தங்களை வைத்தே கடந்த காலங்களில் ஊகிக்க முடிந்தது. ஆனால் ஆலயத்தின் மணியோசையை மாத்திரமே இந்தமுறை கேட்க முடிந்தது. (வ-ரி)

## நாடாளுமன்ற...

இடத்தையும், பாகிஸ்தான் மூன்றாம் இடத்தையும், இந்தியா ஐந்தாம் இடத்தையும், பூட்டான் ஆறாவது இடத்தையும், மாலைதீவு ஏழாவது இடத்தையும் வகிக்கின்றன. இலங்கை எட்டாவது இடத்தில் உள்ளது.

பன்னாட்டு ரீதியில் நேபாளம் 48, ஆப்கானிஸ்தான் 54, பாகிஸ்தான் 70, பங்களாதேஷ் 91, இந்தியா 148, பூட்டான் 170, மாலைதீவு 179, இலங்கை 180 ஆவது இடங்களில் உள்ளன. இதேவேளை, ஐரோப்பிய ஒன்றியத் தகவல் படி இலங்கையின் 2015ஆம் ஆண்டு தேர்தலின்போது பால்சமத்துவம் தொடர்பில் முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும், அந்தத் தேர்தலில் போட்டியிட்ட 6 ஆயிரத்து 151 வேட்பாளர்களில் 556 பேர் மாத்திரமே பெண்களாக இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண நிர்வாக ஆட்சி முறையில் 4.1வீதமானோரே பெண்கள் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (த-5)

## புதிய...

புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கான முயற்சிகளில், பொதுமக்களிடம் கருத்து அறியும் செயற்பாடு கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டது. மக்கள் கருத்தறியும் குழுவினால் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவுக்கு லால் விஜேநாயக்க தலைமை வகித்திருந்தார்.

'புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் பொதுமக்களுக்கு உரிய முறையில் அறியப்படுத்தியுள்ளதாக' லால் விஜேநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மக்களிடம் மேற்கொண்ட கருத்துக் கணிப்புக்களின் அடிப்படையில், 55 சதவீத மக்கள் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை என்று தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள லால் விஜேநாயக்க, உரிய தெளிவுபடுத்தல்கள் காரணமாகவே தமது குழுவுக்கு எழுத்து மூலம் மூவாயிரம் யோசனைகளும், வாய் மூலம் இரண்டாயிரத்து 216 யோசனைகளும் கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

## தமிழ் அரசு...

ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலகத் தொழிலாளர் தினமாகிய மே முதலாம் திகதி ஆண்டு தோறும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. இலங்கை தமிழரசுக் கட்சியினரும் வருடந்தோறும் பேரணி மற்றும் கூட்டத்தை நடத்தி வருகின்றனர். அந்தக் கட்சியின் மே நாள் நிகழ்வுகள் நீண்டகாலம் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்த ஆண்டுக்கான மே நாள் நிகழ்வுகள் கிழக்கில் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கிழக்கில் அம்பாறை மாவட்டத்தைக் கருத்திற்கொண்டு, அங்கு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழ் அரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கடந்த ஆண்டின் மே தினப் பேரணி இணுவில் கந்தசுவாமி ஆலய முன்றிலில் ஆரம்பமாகி மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானம் வரை இடம்பெற்று அங்கு கூட்டம் நடத்தப்பட்டது.

(வ-101)

## ரூபா 1 கோடி...

செய்யப்பட்டுள்ளார் என்று சுங்கத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

"கட்டுநாயக்க வானூர்தி நிலைய சுங்க அதிகாரிகளால் குறித்த நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். அவரிடம் ஒரு கிலோ 156 கிராம் எடையுடைய ஹெரோயின் மீட்கப்பட்டது.

அவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர். விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று சுங்கத் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

(வ-4)

## கறுப்பு...

கேப்பாபிலவில் உள்ள 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி 45ஆவது நாளாகவும் நேற்று தமது தொடர் அறவழிப் போராட்டத்தை கேப்பாபிலவு மக்கள் முன்னெடுத்தனர். தமிழ் புத்தாண்டை கரிநாளாக அவர்கள் கடைப்படித்தனர். அனைத்து மக்களும் கறுப்பு ஆடைகள் அணிந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

கேப்பாவிலவு காணிகளை விடுவிக்கக் கோரி ஐந்து வருடத்துக்கு மேலாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஆறுமுகம் வேலாயுதம்பிள்ளை மரத்தில் ஏறி தனது எதிர்ப்பை தெரிவித்தார். அத்துடன் அவருடன் கிராம மக்கள் மரத்தின் கீழ் நின்று கோசங்களை எழுப்பினர். 'பட்டாசு பிடிக்கும் கையில் கறுப்புக்கொடியா?, புத்தாடை அணியும் நாங்கள் கறுப்பு உடை அணிவதா? என்று சிறுவர்கள் கோசம் எழுப்பினர்.

கேப்பாபிலவில் நேற்றைய தினம் நடைபெற்ற கவனவீர்ப்புப் போரட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன் ஆகியோரும் பங்கேற்றனர்.

'பரம்பரையாக கௌரவமாக வாழ்ந்த கேப்பாபிலவு மக்கள் இன்று நடு வீதியில் புத்தாண்டு கொண்டாட வேண்டிய நிலையில் உள்ளோம். எங்கள் காணிகளை அரசு விரைவாக விடுவித்து எங்களை மீள்குடியேற்ற வேண்டும்" என்று கேப்பாபிலவு மக்கள் வலியுறுத்தினர். (வ-7)

## போராட்டம்...

காணிகளை விடுவித்தால் மாத்திரமே நல்லிணக்கம் ஏற்படும் என்று இராணுவத்தினருக்கு எழுத்துமூலமாக மக்கள் பதிலளித்தனர்.

கேப்பாபிலவில் உள்ள காணியை விடுவிக்கக் கோரிப் பிரதேச மக்கள் 45 நாள்களாகத் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

புதுவருடத்தைக் கரிநாளாகக் கடைப்பிடித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முற்பகல் 10.30 அளவில் இராணுவ முகாமில் இருந்து புது வருட உணவுப் பொதியுடன் தமிழ், சிங்கள பாரம்பரிய உடையணிந்து இராணுவத்தினர் தமது முதன்மை வாயிலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களிடம் சென்றனர்.

அதன்போதே விரைவில் உங்கள் காணி விடுவிக்கப்படும் என்றுகூறி உணவுப் பொதி வழங்கினர். புதுவருட வாழ்த்துக்களையும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்துத் தமது காணிகள் விடுவிக்கப்பட்டால் மாத்திரமே நல்லிணக்கம் ஏற்படும் என்று கேப்பாபிலவு மக்கள் எழுத்துமூலமாக இராணுவத்தினருக்குப் பதில் வழங்கினர்.

(வ-4,7)

## காணாமற்போனோரின்...

ஈடுபட்டனர். பிறந்திருக்கும் புது வருடத்திலும் எங்களுக்கு கண்ணீர்தான் மிச்சமா? என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

" வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? அரசே பதில் சொல்" என்ற கோரிக்கையுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக 38ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர். புதுவருடத்தை துக்கநாளாக அவர்கள் கடைப்பிடித்தனர்.

"போர்க் காலத்தில் எங்கள் பிள்ளைகளை தொலைத்து விட்டு இன்றும் தேடி அலைந்து கொண்டு இருக்கின்றோம். எந்த விதமான பதில்களும் உரியவர்கள் வழங்கவில்லை. புது வருடத்தை சந்தோசமாகக் கொண்டாடக் கூட முடியவில்லை. கண்ணீருடன் காத்திருக்கின்றோம். இந்த புதிய வருடத்திலாவது எங்கள் கண்ணீருக்குப் பதில் கிடைக்குமா? என்ற ஏக்கம்தான் எங்கள் மனதில் நிலை கொண்டுள்ளது" என்று அவர்கள் தெரிவித்தனர்.

### கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறவுகளின் தொடர் போராட்டம் 54ஆவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் ஆகியோரின் விடுதலையும் அவர்கள் தொடர்பான தெளிவான வெளிப்படுதலையும் வலியுறுத்தி இரவு பகல் பாராது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் அவர்களது உறவினர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

புதுவருட தினத்தை காணாமற்போனவர்களின் உறவுகள் கறுப்புநிற ஆடைகளை அணிந்து தலையில் கறுப்புநிறப் பட்டி அணிந்தும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் எப்போது எங்களிடம் வருகின்றார்களோ அன்றைய தினத்தில்தான் எங்களுக்கு வருடப்பிறப்பு என்று பெற்றோர் தெரிவித்தனர். வருடப்பிறப்பு தினத்தில் எங்களின் பிள்ளைகள் இல்லையே என்று உறவுகள் கண்ணீர்விட்டு அழுதனர்.

"எமது போராட்டத்துக்கு இதுவரை முடிவுகள் எட்டப்படவில்லை. போராட்ட வடிவம் மாற்றமடையவுள்ளது. போராட்ட வடிவம் மாற்றம் அடையும் சந்தர்ப்பத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இழப்புக்கள் ஏதும் ஏற்படின், அதற்கு உலக நாடுகளும் கூட்டு அரசுமே பதில் சொல்ல வேண்டும்" என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

### வவுனியா

"ஐம்பது நாட்கள் கடந்தும் எங்கள் அழுகுரல் கேட்கவில்லையா?" என்று கேள்வியெழுப்பியவாறு காணாமற்போனோரின் உறவுகள் வவுனியாவில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியாவில் கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டம் புதுவருடப் பிறப்பான நேற்று 50ஆவது நாளை எட்டியது.

அங்கு ஒன்று கூடிய உறவுகள் வவுனியா கந்தசாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை முடித்துக்கொண்டு காலை 10.30 மணியளவில் பசார் வீதி வழியாக இலுப்பையடி சென்று, நீதிமன்ற வீதி வழியாக போராட்ட இடத்துக்குப் பேரணியாகச் சென்றனர். இதில் கலந்து கொண்ட உறவுகள் "நாட்கள் ஐம்பது, நாங்களோ நடுத்தெருவில்", "புதுவருடம் வந்தது, எங்கள் பிள்ளைகள் வரவில்லை", "காணாமல் ஆக்கப்பட்டோருக்குப் பதில் கூறு", "எங்கே? எங்கே? எங்கள் பிள்ளைகள் எங்கே?" "ஐம்பது நாள்கள் கடந்தும் எங்கள் அழுகுரல் கேட்கவில்லையா?" "நல்லாட்சி அரசே ஏழாயிரம் கடிதங்களுக்கு பதில் கூறு", "அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய்", "வேண்டும் வேண்டும் எமக்கு நீதிவேண்டும்" போன்ற கோசங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

"தனிநாடு கேட்டு நாங்கள் போராட்டம் மேற்கொள்ளவில்லை. இராணுவத்திடம் ஒப்படைத்த எமது பிள்ளைகளையே நாங்கள் எங்களிடம் திரும்ப ஒப்படைக்குமாறு கோரி போராட்டம் மேற்கொண்டு வருகின்றோம். எங்களுடைய பிள்ளைகள் கிடைக்கும் வரை எமது போராட்டத்தைத் தொடருவோம்" என்று உறவினர்கள் தெரிவித்தனர். இவர்களுக்கு ஆதரவாக சில பொது அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். காணாமற்போனோரின் உறவுகளால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு மக்கள் பிரதிநிதிகள் எவரும் சமுகமளிக்கவில்லை.

இதேபோன்று யாழ்ப்பாணம் மருதங்கேணியிலும் திருகோணமலையிலும் போராட்டங்கள் தொடர்கின்றன.


(வ-4, 6, 7)

## நமக்கு உதவுவோர்


- மனிதன் ஒரு சமூகப் பிராணி.
- அவனால் தனித்து வாழ முடியாது.
- நாம் ஒருவருக்கொருவர் உதவியாக வாழ வேண்டும்.
- ஒவ்வொருவரும் ஒவ்வொரு செயலைச் செய்கின்றோம்.
- ஒருவர் செய்யும் செயல்கள் மற்றவருக்கும் உதவுகிறது.
- பசித்தவனுக்கு உணவளிக்க ஒருவர் வேண்டும்.
- உடல் நலமற்றவருக்கு வைத்தியம் செய்ய மருத்துவர் வேண்டும்.
- ஒருவர் மற்றொருவருக்கு செய்தி ஒன்றை அஞ்சல் மூலம் அனுப்புகிறார்.
- அதனை அஞ்சல் அலுவலர் உரியவரிடம் சேர்க்கிறார்.
- ஆசிரியர் பாடங்களைக் கற்பிக்கிறார்.
- கிராம சேவையாளர் மக்களுக்கு சேவை செய்கிறார்.
- நீதிபதி வழக்குகளை விசாரித்து நீதியை வழங்குகிறார்.
- காய்கறி வியாபாரி காய்கறிகளை எமக்கு விற்பனை செய்கிறார்.
- மீன் வியாபாரி மீனை எமக்குத் தருகிறார்.
- கடைக்காரர் நமக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களைத் தருகின்றார்.
- விவசாயிகள் பயிர்களை விளைவித்து எமக்கு அரிசி , தானியங்களாகத் தருகின்றனர்.
- சாரதிகள் வாகனங்களைத் செலுத்தி உதவுகின்றனர்.
- எமது சமூகத்தில் தனியாகவும் கூட்டாகவும் நமக்குப் பலர் உதவி செய்கின்றனர்.
- நாமும் உதவி தேவைப்படுவோருக்கு உதவுவோம்.

## உயிர்த்த ஞாயிறு
### (ஈஸ்டர் பண்டிகை)

1. உலகில் வாழும் கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்படும் பண்டிகை ஈஸ்டர் பண்டிகை.
2. சிலுவையில் அறையப்பட்டு மரணித்த இயேசு பிரான் மீண்டும் உயிர்த்தெழுந்த நிகழ்வை இந்தப் பண்டிகை அன்று கிறிஸ்தவ மக்கள் கொண்டாடுவர்.
3. இயேசுவைப் பின்பற்றுபவர்களின் நம்பிக்கைப்படி இயேசு பெரிய வெள்ளி தினம் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த பின் நிலக்கீழ் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்தார்.
4. உரோமன் கத்தோலிக்க திருச்சபையினால் இவ்விழா குருத்தோலை ஞாயிறன்று ஆரம்பமாகி உயிர்த்த ஞாயிறு தினம் வரை எட்டு நாள்கள் பரிசுத்த வார திருவிழாவென அனுஷ்டிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது.



5. இதில் புனித வியாழன், புனித வெள்ளி துக்க நாள்களாக கடைப்பிடிக்கப்படும்.
6. மக்கள் இந்தநாள்களில் ஜெப, தப, விரதம்போன்றவற்றில் ஈடுபட்டு மச்ச மாமிசம் தவிர்த்து உண்டு அமைதியைக் கடைப்பிடிப்பர்.
7. தேவாலயங்களில் இந்த நாள்கள் தொடர்பான 'பாஸ்கு' எனப்படும் வழிபாடுகளும் இடம்பெறும்.
8. ஈஸ்டர் அன்று தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனையுடன் உயிர்த்த ஞாயிறு பண்டிகை ஆரம்பமாகும்.
9. இந்த நாளில் அனைவரும் ஒருவரை ஒருவர் சந்தித்து 'இயேசு உயிர்த்தெழுந்தார்' என்ற செய்தியைப் பாரிமாறிக் கொண்டு மகிழ்வர்.
10. இந்தப்பண்டிகையன்று பலதான தருமச் செயல்களிலும் கிறிஸ்தவர்கள் ஈடுபடுகின்றன.



## ஆவுரோஞ்சிக் கல்
### (ஆ + உரோஞ்சும் + கல்)

தமிழரின் பண்பாட்டுக் கருவூலங்களாக விளங்கும் பொருள்கள் நம்மிடையே பலவுண்டு. ஆனால் கால மாற்றத்தினாலும் நவீன வசதிகள் காரணமாகவும் இவற்றில் பல மறைந்து ஒளிந்து விட்டன. இவற்றுள் பலவற்றை இன்றைய தலை முறையினர் பார்க்காதது மட்டுமல்ல கேட்டும் அறிந்ததில்லை. இத்தகைய பொருட்களில் குறிப்பிடத்தக்கவை ஆவுரோஞ்சிக் கல். சுமைதாங்கி. நீர்த் தொட்டி என்பன

போக்குவரத்துச் சாதனங்கள் பல இல்லாத காலத்தில் மக்கள் கால்நடையாகவும் மாடுகள் பூட்டிய வண்டில்களிலுமே பயணம் செய்ய வேண்டியிருந்தது. செல்லும் வழியில் களைப்புறும் மாடுகளை மர நிழல் களைப்பாற வைத்து, தாகசாந்தி செய்யும் முகமாக வழிகள் தோறும் மர நிழல்களில் செல்வந்தர்கள் நீர்த்தொட்டிகளைக் கட்டி வைத்தனர். இந்தத் தொட்டிகள் சில வேளைகளில் பாரிய கற்களில் குடைந்தெடுக்கப்பட்ட வையாகவும் இருக்கும். நீர் நிரம்பிய இந்தத் தொட்டிகளில் மாடுகள் தாகத்தைத் தீர்த்துச் சென்றன. அதே போன்றே மேய்சல் மாடுகளும், வண்டில் மாடுகளும் தமது மசவெடுத்த உடல்களைத் தேய்த்து ஆறுதலடைய வள்ளல்கள் சொர சொரப்பான கற்கள் கொண்டு சிறு தூண்களைக் கட்டி வைத்தனர். இவை மாடுகளின் சராசரி உயரம் வரை கட்டப்பட்டிருக்கும். இவற்றில் மாடுகள் தமது உடம்பைத் தேய்த்து உடம்பில் ஏற்படும் 'மசமசப்பை" போக்கிக் கொண்டன. இந்தத் தூண்களே ஆ+(மாடுகள்) உரோஞ்சசும் கல் என பெயர் பெற்றன.

இன்னும் தலையில் பாரம் சுமந்து செல்வோர் தம் தலைப் பாரத்தை இறங்கி வைத்து களைப்பாறுவதற்கு மக்க்ளின்உயரத்தில் சுமை தாங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கும். இவற்றின் பக்கத்தே கிணறுகள் அமைக்கப்பட்டோ அல்லது பானைகளில் குடிநீர் வைக்கப்பட்டோ இருக்கும். வழிப்போக்கர் இங்கே சுமைகளை இறக்கி வைத்து தாகசாந்தி செய்து களைப்பு நீங்கிச் செல்வர்.

## நீதிநூல்கள்

நமது நீதி நூல்கள் பலவும் ஒரே விடயத்தைப் பல்வேறு கோணங்களில் சூழ்நிலைகளில் வற்புறுத்துகின்றன. 'எறும்பூரக் கல்லும் தேயும்' என்ற பழமொழியை இதற்காகவே நம் முன்னோர் கூறியுள்ளனர். ஒரே விடயத்தைப் பல முறை பல பேர் கூறினால் அது பதியாத மனதிலும் நாளாவட்டத்தில் ஆழமாகப்பதியும் என்ற நோக்கில்தான் எல்லா நீதி நூல்களுமே தருமம் செய்செய், பொய் பேசாதே, தாய் தந்தையரை மதி, கடவுளை வணங்கு, தீயோரோடு சேராதே, சினம் காத்து செம்மையாக வாழ், இரக்கம் காட்டு, இன் சொல் பேசு" என்றெல்லாம் மேலான நல் வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களைப் போதிக்கின்றன.

## அகர வரிசைப்படி எழுத்துக்களை எழுதுவோம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | | இ | | | ஊ | | | ஐ | | | ஔ |
| க | | | கீ | | கூ | | கே | | கொ | கோ | |
| | சா | சி | | சு | | செ | | சை | | சோ | சௌ |

## நல்ல ஆலோசகர்கள்



ஒரு அரசன் தன் நாட்டில் வாழும் எழுபது வயது நிரம்பிய முதியவர்களைக் கண்காணாத இடங்களில் கொண்டு சென்று விட்டு விடும்படி உத்தரவு பிறப்பித்தான். முதியவர்களால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை என்பது அவனது கருத்து. நாட்டு மக்கள் பலருக்கும் இதனில் உடன்பாடு இல்லையாயினும், அரசன் கட்டளையை மீறினால் தண்டனை கிடைக்குமே என்ற அச்சத்தில் அவன் கட்டளையை நிறைவேற்றினர்.

சில மாதங்கள் கழிந்தன. நாட்டில் பெருமழை, வெள்ளம், புயல். இதனால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகினர். இந்நிலையைச் சமாளிக்க முடியாத மன்னன் இந்த நிலைமைக்கு சரியான தீர்வு கூறுபவர்களுக்கு பெரும் பரிசு வழங்குவதாக நாட்டு மக்களிடம் கேட்டுக் கொண்டான்.

ராமன் என்பவன் கொடுத்த யோசனை மற்றைய பலர் கொடுத்தவற்றிலும் சிறந்ததாக இருக்க, அதனை நடைமுறைப்படுத்தி அந்த அனர்த்தத்தில் இருந்து மக்களைக் காப்பாற்றினான் அரசன். இன்னும் சில மாதங்களில் பெரும் பஞ்சமும் பின்னர் தொற்று நோய்களும் பரவின. இந்தச் சந்தர்ப்பங்களிலும் ராமனது ஆலோசனைப் படியே நடந்து நாட்டு மக்களை அரசன் காப்பாற்றினான் .

அரசனுக்கு ஒரே ஆச்சரியம். சாதாரண ஒரு குடி மகன் இப்படியான மதிநுட்பமான ஆலோசனைகளை எப்படி கூற முடியுமென யோசித்து அவனைத் தன்னிடம் அழைத்து விபரம் கேட்கலானான் "அரசே முதலில் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தாங்கள் முதியவர்களையெல்லாம் நாடுகடத்தச் சொன்னபோது நான் அப்படிச் செய்யவில்லை. எனது வீட்டுப் பரனில் என் தகப்பனாரை ஒளித்து வைத்து எவருக்கும் தெரியாமல் பராமரித்து வந்தேன்" என்றான் ராமன். தொடர்ந்து அவன் கூறுவதற்குள் "நீ என் கட்டளையை மீறியது குற்றமல்லவா? என்றான் அரசன். "அரசே உங்கள் கட்டளையை மீறியது குற்றமே. ஆனால் முதியவர்களான பெற்றோரை கண்காணாத இடத்தில் பிள்ளைகள் தவிக்கவிடுதல் அதைவிடப் பெரிய குற்றமில்லையா? என்றான் ராமன். "சரி மேலே சொல்" என்றான் அரசன் "அரசே எங்கள் நாட்டில் துன்பங்கள் வந்த போதெல்லாம் என் தந்தையிடமே அதற்கான ஆலோசனைகளைப் பெற்று தங்களுக்கு வழங்கினேன்" என்றான். "அப்படியா ? 70 வயது தாண்டிய ஒரு வயோதிபரிடம் இத்தனை திறமை இருக்க முடியுமா? என்றான். அரசன் வியப்புடன். "அரசே வயோதிபர்கள் யார்? எம்மைப் பெற்று பாராட்டி சீராட்டி உணவூட்டி பேச வைத்து நடைப் பயிற்சி, கல்வி தந்து எம்மை இன்று நல்ல நிலைக்கு ஆளாகியவர்கள் அவர்களே... அவர்களுக்கு தள்ளாமையும் இயலாமையும் வந்து அவர்களை ஓரிடத்தில் முடக்கி விட்டதால் நாம் அவர்களைத் தள்ளி வைத்தல் எந்த வகையில் நியாயம்? உங்களையும் இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் உங்கள் பெற்றோர் தானே! தற்போது அவர்கள் உயிரோடில்லை என்பதற்காக மற்றவர்களின் பாச உணர்வைத் தாங்கள் மறந்து விடலாமா? மேலும் 70 வருடங்களுக்குள் அவர்கள் உடலால் வலுகுன்றிப் போயினும் அவர்கள் பெற்ற அனுபவ அறிவு எங்கேயும் போய்விடாதே. ஆதலால் அவர்களைப் பயனற்றவர்கள் என்று நீங்கள் தள்ளுவது சரியல்லவே" என்றான் ராமன். அவன் சொன்னவற்றைக் கேட்கக் கேட்க அரசன் மனம் நெகிழ்ந்து தான் செய்த பெரும் தவறை உணர்ந்தான். சகல மரியாதைகளோடும் தன் கட்டளையால் தூர அனுப்பட்ட வயதில் மூத்தவர்களை நாட்டுக்கு அழைத்து வந்து அவர்களில் திறமையானவர்களை தனது ஆலோசகர்களாகவும் அமர்ந்திக் கொண்டான்.

**முதியோரை அன்பு செய்வோம்.**
**முதியோர் எமது முதுசங்கள்.**

## யாழ். துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் ஆண்கள் 'பி' பிரிவு ஆட்டங்கள் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. (ம-23)




## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 15
**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம்**
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்ரோறி அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.
**நியூபைட் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா நியூபைட் விளையாட்டுக் கழகத்தின் 21ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நியூபைட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதவுள்ளது. மாலை4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்ஹிஜ்ரா அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்இக்பால் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# வீரரை வெளியேற்றும் முறை அறிமுகப்படுத்துகிறது ஐ.சி.சி.



மைதானத்தில் வீரர்கள் வார்த்தை மோதலில் ஈடுபட்டால் அவர்களை மைதானத்தைவிட்டு வெளியேற்றக்கூடிய அதிகாரம் நடுவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.
இந்தத்திட்டம் எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் ஆட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறியவருகிறது.
சமீப காலமாக வீரர்கள் மைதானத்தில் கடுமையாக வார்த்தை மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மையில் முடிவடைந்த இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர் இதற்குத் தக்க சான்று. கனவான் தன்மையுடைய விளையாட்டு என்று வர்ணிக்கப்படும் கிரிக்கெட்டில் தற்போது அந்தத் தன்மை இல்லாமல் போவதால் இந்த நிலையைக் கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். இதன் அடிப்படையிலேயே இந்தப் புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
புதியவிதிமுறையின்படி வீரரொருவர் அளவுகடந்த வார்த்தை மோதலில் ஈடுபட்டால் அவரை மைதானத்தில் இருந்து வெளியேற்றவும், அல்லது எதிரணிக்கு 5 ஓட்டங்கள் கொடுக்கவும், அல்லது அந்த ஆட்டத்தைக் கைவிடவும் நடுவருக்கு முழு அதிகாரம் வழங்கப்படவுள்ளது என்று தெரிகிறது. பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் பொதுக்கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திலேயே இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது. (ம)



## ரொனால்டோ 100

ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழக அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் தனது 100 ஆவது கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ.
ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருட சம்பியன்ஸ் லீக் தொடரில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற காலிறுதி முதல்சுற்று ஆட்டத்தில் பெயர்ன் முனிச்சை வென்றது ரியல் மட்ரிட். இந்த ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியின் சார்பாகப் பதிவான இரண்டு கோல்களையும் அந்த அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோ பதிவுசெய்தார். அவர் இரண்டாவது கோலைப் பதிவுசெய்த போது ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு எதிராக பதிவுசெய்த 100 ஆவது கோலாக அது அமைந்தது.
கடந்த வருடம் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் தொடரில் ரியல்மட்ரிட் அணி கிண்ணம் வென்றது. ரொனால்டோவின் சிறந்த ஆட்டமே அந்த அணி கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## முடிவைத் திரும்பப் பெற்றார் தீவுகளின் ஜெரோம் ரெய்லர்

மேற்கிந்தியத் தீவுகளின் வேகப்பந்து வீச்சாளரான ஜெரோம் ரெய்லர் தனது ஓய்வு முடிவைத் திரும்பப் பெற்றுள்ளார். 46 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள ரெய்லர், கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் பன்னாட்டு அரங்கில் இருந்து விடைபெற்றுச் சென்றார். தற்போது அவர் தனது முடிவை திரும்பப் பெற்றுள்ளார். "இன்னும் ஏராளமான ஆட்டங்கள் எனக்காக எஞ்சியுள்ளன என்று நம்புகிறேன். மேற்கிந்தியத் தீவுகளின் டெஸ்ட் அணியில் இடம்பிடித்து இன்னும் ஏராளமான ஆட்டங்களில் என்னால் விளையாடமுடியும். அணியில் என்னைத் தேர்வுசெய்தால், அணியின் வெற்றிக்கு உதவும் வகையில் சிறப்பாக செயற்படுவேன். தற்போது ஏராளமான இளம் வீரர்கள் உள்ளனர். அவர்களுடன் இணைந்து என்னுடைய அனுபவத்தால் அணியை முன்னோக்கி எடுத்துச்செல்ல முடியும்" என ரெய்லர் மேலும் தெரிவித்தார். (ம)

## ரி—20 ஆட்டங்களில் டோனி சிறந்தவரல்லர்

### கங்குலி கருத்து



ரி-20 ஆட்டங்களில் டோனியை சிறந்த வீரர் என்று சொல்லிக்கொள்ள இயலாது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தெரிவித்தார்.
நடப்புவருட ஐ.பி.எல். தொடரில் டோனி புனே அணிக்காக விளையாடி வருகிறார். பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்கத் திணறிவரும் அவர்மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கங்குலியும் அவரை விமர்சித்தார்.
ரி-20 வகை ஆட்டங்களில் கடந்த பத்து வருடங்களில் டோனி ஒரேயொரு அரைச்சதம் மட்டுமே பதிவுசெய்துள்ளார்.
இது ஒரு சிறந்த வீரருக்கான அடையாளமல்ல என்று கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)




## அக்கினிச் சிறகுகளின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 15
அக்கினிச்சிறகுகள் அமைப்பு வடக்கு கிழக்கு மாகாணங்களின் கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்திவரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கால்பந்தாட்டத் தொடரின் மட்டக்களப்பு, அம்பாறை லீக்குகளில் பதிவு செய்த அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.
இந்தச் சுற்றில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)

# யுவன்டாஸில் நீடிக்கிறார் டைபாலா

யுவன்டாஸ் - டைபாலா இடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டுவரை நீடிக்கப்பட்டது.

ஆர்ஜென்ரினா அணியின் முன்கள வீரரான டைபாலா கழகத்தைப் பொறுத்தமட்டில் யுவன்டாஸுக்காக விளையாடி வருகிறார். அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் யுவன்டாஸ், பார்சிலோனாவை வீழ்த்த டைபாலா முக்கிய பங்காற்றினார். எனினும் யுவன்டாஸுடனான ஒப்பந்தத்தை டைபாலா நீடிக்கவில்லை. இதனால் அவர் வேறு கழகத்துக்காக ஒப்பந்தமாகவுள்ளார் என்று கருதப்பட்டது. பார்சிலோனா, ரியல் மட்ரிட் போன்ற முன்னணிக் கழகங்கள்கூட டைபாலாவை ஒப்பந்தம் செய்யத் தயாராக இருந்தன. ஆனால் யுவன்டாஸுடன் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரை அதாவது அடுத்த 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளார் டைபாலா.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் டைபாலா வேறு கழகத்துக்குச் செல்கிறார் என்ற வதந்திகளும் முடிவுக்கு வந்துள்ளன. எனினும் ஒப்பந்தத் தொகை தொடர்பில் முழுமையான தகவல்கள் வெளியிடப்படவில்லை. இந்த விபரம் விரைவில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



ஸ்பானியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், இன்று பார்சிலோனா அணியும் ரியல் சொசைற்றெட் அணியும் மோதவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. அந்த அணி இறுதியாக தான் எதிர்கொண்ட ஆட்டத்தில் யுவன்டாஸிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் நெய்மருக்கு லா லிகா தொடரின் மூன்று ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் இன்றைய ஆட்டத்தில் களமிறங்க முடியாத நிலை உள்ளது. இது பார்சிலோனா அணிக்குப் பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)

# பெங்களூருக்கு எதிராக மலிங்க அதிரடி நீக்கம்



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை அணியில் இருந்து மலிங்க நீக்கப்பட்டார்.

நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் மும்பையும், பெங்களூரும் பலப்பரீட்சை நடத்தின. கடந்த சில ஆட்டங்களில் மலிங்க மும்பை அணியின் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இடம்பிடித்திருந்தார். இந்த ஆட்டங்களில் அவர் சொல்லிக்கொள்ளும்படியான பெறுபேறுகளை வெளிப்படுத்திவில்லை. இதனால் நேற்றைய ஆட்டத்தில் இருந்து மலிங்க நீக்கப்பட்டார். மலிங்கவுக்குப் பதிலாக சவுத்தி அணியில் சேர்க்கப்பட்டார்.

பெங்களூர் அணித் தலைவர் கோக்லி காயத்தில் இருந்து மீண்டு நேற்றுக் களமிறங்கினார். அவர் அணியில் இணைவதால் எவர் நிறுத்தப்படுவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது. வற்சன் அணியில் இருந்து நீக்கப்பட்டார். கோக்லி விலகியிருந்த ஆட்டங்களில் வற்சனே அணியை வழிநடத்தினார். இதனால் வற்சனின் நீக்கமும் சிறிதும் எதிர்பாராத விதமாக வந்து அமைந்தது. (ம)

# டோனி, தன் இயல்பான பாணியில் அதிரடியாக விளையாட வேண்டும்

## பிரட் லீ விருப்பம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் டோனி தடுமாற்றத்தை வெளிப்படுத்துகிறார் என்று அவர் மீது விமர்சனங்கள் வைக்கப்படும் நிலையில், அவர் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிரட் லீ.

"டோனி எவ்வளவு சிறந்த வீரர் என்பதை நாம் அறிவோம். அவர் தன் இயல்பான பாணியில் அதிரடியாகவும் நன்றாகவும் விளையாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர் அருமையான குணம் படைத்தவர், கிரிக்கெட் ஆட்டத்துக்கு அவர் எவ்வளவு விரும்பத் தகுந்தவர் என்பதையும் நாம் அறிவோம் அடுத்தடுத்த ஆட்டங்களில் பெரிய அளவில் ஓட்டங்களைக் குவிப்பார்" என பிரட் லீ மேலும் தெரிவித்தார். (ம)

பாதுகாப்பு
உத்தியோகத்தர்கள் தேவை

யாழ் நகரில் உள்ள
பிரபல தனியார் நிறுவனத்துக்கு
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.



வயது : 30 - 50
பகல் / இரவு வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
திறமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையுடன் 17.04.2017 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை கீழ் உள்ள முகவரிக்கு நேரில் சமுகம் தரவும்.

ES பிரிண்டர்ஸ்
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.